1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS, JAFFNA.
Tele{phone: No. 100.

# சத்தியவேதபாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு ஆடி மாதம் 1-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 25-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

பங்குனியிற்போன்று கடூரமாக வெயிலெறிக்கின்றது. காற்றுவீசியபோதிலும் காங்கைதணிவதாயில்லை. யாழ்ப்பாணக்குடாநாட்டின் சிலபகுதிகளில் குளங்கள், கிணறுகள், கேணிகள்வற்றிவிட்டமையாலே மக்கள் பெரிதும்கஷ்டப்படுகின்றார்கள். நேற்றுமுதல மழைக்கோலம் அதிகமாகக் காணப்படுகிறது.

### மருதமடு முதற்திருநாள்

மருதமடுத்திருப்பதியிலே பரிசுத்த செபமாலைநாயகியின் முதற்திருநாள் சென்ற 27-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை வழமைப்பிரகாரம் சிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று. பதினாயிரம் யாத்திரிகர்கள்வரையிலே அதற்குச் சமுகமாயிருந்தார்கள். அன்றுகாலை கொழும்பு அதிமேற்றிராணியாராகிய மகாமேன்மைதங்கிய தோமஸ்கூறே ஆண்டவர் அவர்கள் பெரியபாடற்பூசை நிறைவேற்றினர். அதனைத் தொடர்ந்து திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடந்து முடிந்ததும் ஆண்டவர் அவர்கள் யாத்திரிகர்களை ஆசீர்வதித்தார். நாளைத்தினம் திருப்பதிமுழுவதுமே யாத்திரிகர்களால் தேங்கிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### யாழ்ப்பாணப் புதியநீதிபதி

தற்போது யாழ்ப்பாண டிஸ்திறிக் நீதிபதியாய் இருந்துவருகின்ற திரு. ஸ்பென்சர் இராசரத்தினம் அவர்கள் தமதுஉத்தியோகத்திலிருந்து இளைப்பாறும்படியாய் விடுமுறையிற் செல்லவிருக்கின்றார். இவரிடமாகக் கொழும்புப் பிரதம மஜிஸ்றேற் திரு. டி. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் வருகிறஆவணிமாதம் 11-ந்திகதிமுதல் யாழ்ப்பாண டிஸ்திறிக்நீதிபதியாக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். அத்துடன் யாழ்ப்பாண உதவிமஜிஸ்றேற்றாகவும், விண்ணப்பக்கோட்டு உதவிக்கம்மிஷனாராகவும் இவர் கடமைபார்ப்பார்.

### கடுதாசித் தொழிற்சாலை

வாழைச்சேனையிலே அமைக்கப்பட்டுவரும் அரசாங்க கடுதாசித் தொழிற்சாலை இவ்வருட முடிவில் பூர்த்தியடையவிருக்கிறது. அதனால் வருகிற 1955-ம்ஆண்டின் சித்திரையிலே அதில் கடுதாசிசெய்யும்வேலை ஆரம்பமாகும். கடுதாசிசெய்யத் தேவைப்படும் இலுக்என்ற புற்செய்கையும் தொடக்கப்பட்டுவிட்டது. அதனால் கடுதாசிச்செய்கை ஆரம்பமாகும்போது, தேவைப்படும்புல்லும் கிடைக்கக்கூடியதாகும். தொழிற்சாலைக்கு வேண்டிய யந்திரதளபாடங்கள் ஜேர்மனியிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன. சிமெந்துப்பைகள் செய்யும்யந்திரம் ஏற்கனவே நிறுவப்பட்டுவிட்டது. பிறநாட்டிலிருந்து இறக்குமதிசெய்த கடுதாசிகொண்டே இந்தப்பைகள் செய்யப்படவிருக்கின்றன.



நிகழும் 7-7-54 புதன்கிழமை யன்று
தமது குருத்துவ வெண்பொன் யூபிலியைக்
கண்டுகளிக்கவிருக்கும்
யாழ்ப்பாண மேற்றிராணியாராகிய
மகாவந். ஜே. எமிலியானுஸ் பிள்ளை, O.M.I., D.D., B.Sc.
ஆண்டவர் அவர்கள்

### சுயபாஷைத் தந்திகள்

சுயபாஷைகளில் தந்திஅனுப்பும்வசதிகள் தற்போது கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், காலி, குருநாகல்எனும் ஐந்துநகர்களிலுமுள்ள பெரியதபாற்கந்தோர்களில்தான் செய்யப்பட்டிருக்கின்றன. சமீபகாலத்திலே இலங்கையில் விசேஷவகுப்பையும், முதல்வகுப்பையுஞ்சேர்ந்த சுமார் 60தபாற்கந்தோர்களிலே சுயபாஷைகளில் தந்தி அனுப்பும்வசதிகளைத் தபாற்பகுதி செய்யவிருக்கின்றது.

### இளைப்பாற வேண்டிய வயது

அரசாங்க உத்தியோகஸ்தர்கள் 55 வயதில் இளைப்பாற வேண்டுமென்னும் ஓர்கட்டுப்பாட்டை அரசாங்கம் அமைப்பதாகச் சமீபத்திலே செய்தி பரவலாயிற்று. அது அப்படியல்லவென்றும், 55 வயதுக்குப்பின்னரும் உத்தியோகம்பார்க்க விரும்புகிறவர்கள் 55 வயதாவதற்கு ஆறுமாதங்களின் முன்னரே தங்கள்விருப்பத்தை அரசாங்கத்துக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதே தற்போதுஆக்கப்பட்டிருக்கும் விதியென்றும் பிரதமர் தெரிவித்திருக்கின்றார்.

### இயலாத ஓர்கருமம்

இலங்கைமந்திரிசபை கலப்பானதொன்றாகும்; அதன் அங்கத்தவர்கள் பல்வேறுசமயங்களையும் சேர்ந்தவர்கள்; அதனால் இலங்கையிலே புத்தசமயத்தை அரசாங்க சமயமாக்குவது முற்றுமேஇயலாத ஓர்கருமமாகும்; புத்தசமயத்தை அரசாங்க சமயமாக்குவது அநேககஷ்டங்களையும் உண்டுபண்ணுவதாகும்; அதனால் சமயத்தையும், அரசாங்கத்தையும் பிரித்து வேறாக்கிவைப்பதே சாலச்சிறந்த வழியாகுமென ஜாயெலாவைச்சேர்ந்த ஜினராஜ புத்தகலவன்பாடசாலைப் பெற்றோர்-ஆசிரியர்சங்க பொதுக்கூட்டத்தில் வர்த்தக-கடற்தொழில்மந்திரியார் திரு. ஆர். ஜி. சேனநாயக அவர்கள் பேசியிருக்கின்றார்.

### புதியசமாதான நீதவான்

கரைச்சிக் கிராமச்சங்கதலைவரான திரு. அன்ரன் சி. பொன்னம்பலம்அவர்கள் ஜே. பி. எனப்படும் சமாதான நீதவானாக நியமனம்பெற்றுச் சென்ற சனிக்கிழமை சாவகச்சேரி நீதிபதியான திரு. வி. எம். குமாரசாமிஅவர்கள்முன்னிலையில் விசுவாசப்பிரமாணஞ் செய்திருக்கின்றார்.

### காங்கேசன்துறைத் தேர்தல்மனு

கொழும்பிலே சங். டி சில்வா நீதியரசர்முன்னிலையில் கடந்தஆறுமாதகாலமாக—அதாவது 79 தினங்களாக விசாரணைசெய்யப்பட்ட காங்கேசன்துறைத் தேர்தல்மனுவிசாரணை கடைசியாகச் சென்றவெள்ளிக்கிழமை முடிவடைந்து தீர்ப்புச்சொல்லுதல் பின்போடப்பட்டுள்ளது. இந்தமனுவிசாரணையிலே மனுப்பண்ணியவரான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுக்காக 68பேரும், தபால்-வானொலி மந்திரியார் திரு. எஸ். நடேசன் அவர்களுக்காகப் 12பேரும் சாட்சியம் அளித்திருக்கின்றார்கள்.

### மரதன் சைக்கிள் ஓட்டம்

காங்கேசன்துறையிலிருந்து அம்பாந்தோட்டைவரையிலுள்ள 410 மைல் தூரத்தையும் சைக்கிளிலே ஒரேமுச்சில்பிரயாணஞ்செய்யமுனைந்து சென்ற புதன்கிழமைகாலை காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்ட ஜனாப்முத்து முகம்மதுஎன்பவர் 403 மைல் தூரத்தையும் ஓடிக்கடந்து இன்னும் ஏழு மைல் இருக்கும்போதே கியூவில எனும் கிராமத்தில் மூர்ச்சையுற்றமையால் தனதுமுயற்சியைக் கைவிடலாயினர். 403 மைல்தூரத்தையும் ஓடிக்கடக்க இவருக்கு 48 மணி 38 நிமிஷம்சென்றது.

### புதிய மந்திரிமார்

பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலஅவர்கள் கடந்த இருபத்திரண்டு வருடகாலமாகத் தாம் வகித்திருந்த போக்குவரத்து மந்திரி பதவியைச் சென்றவெள்ளிக்கிழமை இராசிநாமாச் செய்துவிடலாயினர். அதனால் இவரிடமாகப் புதியபோக்குவரத்து மந்திரியாராக நியமனஞ்செய்யப்பெற்றுள்ள திரு. மொண்ரேகு ஜயவிக்கிரமஅவர்கள் இன்று தம்புதிய பதவியை ஏற்றிருக்கின்றார். புதிய நிதி மந்திரியாரான திரு. எம். டி. எச். ஜயவர்த்தன அவர்களும் இன்றுதினம் தமதுபுதியபதவியைக் கையேற்று நடத்துவார்.

### ஆனையும் சைக்கிள்காரரும்

சென்ற 28-ந்திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து சைக்கிள்களிலே மதவாச்சிக்குச் சென்றுகொண்டிருந்த இருவர் 96-ம் மைல் கட்டைக்குச் சமீபமாக ஓர்தனியானையால் தாக்கப்படவே, அவர்களில் ஒருவர் பலமாகக்காயமடைந்து அனுராசபுர ஆஸ்பத்திரிகொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டனர். சைக்கிள்கள்இரண்டுமே பாவிக்க முடியாதவகையில் சேதமாக்கப்பட்டன. அவ்வழியேசென்ற ஒருகார் இருவரையும் ஆஸ்பத்திரிகொண்டு போய்ச் சேர்த்தது.

### புதியசெனற்றர்

சேர் ஒலிவர் குணதிலக அவர்கள் தமதுசெனற்றர்பதவியை இராசிநாமாச் செய்தமையாலே அவரிடமாகப் புதியசெனற்றர்பதவியைத் திரு. எஸ். பாராசசிங்க அவர்கள் வகிக்கவிருக்கின்றார். இவர் இலங்கைத் தெங்குப்பொருட்சபை, தெங்குப்பொருட் கம்மிஷன் ஆதியவற்றின் நிர்வாகிகள்சபைத் தலைவராகவும், மற்றும்பலஸ்தாபனங்களின் தலைவராகவும் கடமையாற்றியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கே செய்தீர்கள்

"என்னுடைய மிகவும் சிறிய சகோதரர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத். 25—40.)

ஓர்நாள் நரைதிரைகொண்ட விருத்தாப்பியன்ஒருவன் பெத்லகேம்நகருக்குப் போகும்பாதையிலே ஒருசிறு தெருவழியாக மெதுவாய் நடந்து கொண்டிருந்தான். அவ்வாறுநடந்து கொண்டிருக்கையில் அவன் நீலவானத்தை அடுத்தடுத்து அண்ணாந்து பார்த்துத் தான்சமீபத்தில்அடையப் போகிற யாதோஒரு சந்தோஷத்தை நினைத்து அக்களிப்புற்றவனாகக் காணப்பட்டான். நரைதிரைமிகுந்த அவனது வதனத்தில் புன்னகை தாண்டவமாடியது. அவன் சிலதூரம்நடந்தபின் வழியோரத்திலே ஒருபுற்தரைமீது உட்கார்ந்து, தனதுநீண்ட அங்கியின் பைக்குள்இருந்து பரிமளிக்கும் ஒருவாசனைத்திரவியக் குப்பியையும், பொற்கட்டியையும், ஒளிவீசும் பெரியஒரு மாணிக்கக்கல்லையும் ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்துப்பார்த்துச் சிறிது கவலைப்பட்டான்.

"அந்த அழகு சொரியும் குழந்தைக்கு இவைபோதாவே! இன்னும் அதிகமிருந்தால் நன்றாயிருக்குமே! இவ்வுலகில் என்னென்ன மிகஅரியனவும், அழகியனவும், விலையுயர்ந்தனவுமாய் இருக்கின்றனவோ, அவையனைத்தையும் ஒருங்கேகொண்டுவந்து அத்தெய்வீகக்குழந்தைக்குச் சமர்ப்பித்தாலல்லோ தாழ்வில்லை" என்று தனக்குள்ளேயே சொல்லிச் சலித்தான். பிறகு எழுந்து நடந்துபோகையில் நகரம்சமீபிக்கவே, சனங்களின் நடமாட்டத்தினால் உண்டான சந்தடி, இரைச்சல், தூசிஆதியனமத்தியில் மற்றவழிப்போக்கர்களுடன் கலந்துகொண்டான். பொன், வாசனைத்திரவியம், மாணிக்கக்கல் முதலியகாணிக்கைகளைக் கொண்டுபோய்த் தேவகுழந்தையின் பாதாரவிந்தத்தில் சமர்ப்பிக்கப் போகிறேனே என்றதை நினைக்க நினைக்க, அவன் இருதயத்தில் பொங்கியெழுந்த ஆனந்தம் அவன்முகத்தில் பிரதிபிம்பித்தது.

அவன் இவ்வாறு தேவகுழந்தையின் சிந்தனையாகவே நடந்துபோகும்போது பாதையின் நடுவே ஒருசனக்கும்பல் கூச்சல்போட்டு வழியை மறித்துக் கொண்டிருந்ததைக் கண்டான். கண்டதும் அதென்னகூச்சலென்று நெருங்கிப்பார்த்தபோது, இரக்கமற்றஎசமானாலே குரூரமாய்அடிபட்டு அழுது கொண்டிருந்த ஒருசிறுவனைச் சூழ்ந்து கொண்டிருந்த கூட்டமே அதுஎனக் கண்டான். "அந்தோ! என்ன பாடுபடுகிறான்சிறுவன்? இவனுக்கு என்ன வகையில் உதவிசெய்யலா"மெனச் சிந்தித்தவனாய், உடனே தனதுசட்டைப்பையிலிருந்த வாசனைத்திரவியக் குப்பியை எடுத்துஉடைத்துப் பரிமளதைலத்தை அச்சிறுவனின் காயங்களில் விட்டுக்கட்டி, அவனுக்குச் சில ஆறுதலானவார்த்தைகள் சொல்லியதன்மேல் ஜெருசலேம்நகரப் பிரயாணத்தைத் தொடர்ந்துநடத்தினான்.

அப்போது நிர்ப்பாக்கிய ஸ்திதியிலிருந்த ஓர்ஏழைப் பிச்சைக்காரன் மிகப்பரிதாபகரமாகப் பிரலாபித்துக் கொண்டு அவனண்டைவந்து, "ஓ பெரியவரே! நல்லவரே! இந்தப் பாவிக்கு ஏதாகிலுங்கொஞ்சம் பிச்சை கொடும்; நான் ஓர்நிர்ப்பாக்கியகிழவன்; பசிப்பிணியாலே பெரிதும் வருந்துகின்றேன்; என்பேரில் இரக்கங்காட்டும்" என்றுமன்றாடினான்.

இப்பரிதாபமொழிகளைக் கேட்டதும் வயோதிகனுக்கு அப்பிச்சைக்காரன் மீது பெரிதும்அனுதாபம் பிறக்கவே, அவனுக்கு ஒன்றுஞ்செய்யாது விட்டுப்போக மனம்வரவில்லை. ஆனால், அவனுக்குக் கொடுக்கக் காசுஒன்றுமில்லை. பெத்லகேம் திருக்குழந்தைக்குக் காணிக்கைசெலுத்த வைத்திருந்த ஒரு பொன்காசைத்தவிர வேறொன்றுமில்லை. என்செய்வான்! சற்று ஆலோசனை செய்தபிறகு, தன்சட்டைப்பையில் கையைவிட்டு அதிலிருந்த பொன் காசைஎடுத்து அந்த வறிஞனுக்குக் கொடுத்து, "ஓ! தேவபாலனுக்குச் செலுத்த நம்மிடம் மாணிக்கக்கல் ஒன்று இருக்கிறதன்றோ!" என்று தனக்குள்ளேசொல்லித் தன் மனதைத் தேற்றிக்கொண்டு வழிநடந்து சென்றான்.

பெத்லகேம்நகரை அடைந்தபிறகு அதன் சனநெருக்கமுள்ள தெருக்களினூடாய் நடந்துபோகும்வழியில் அடிமைகளைவிற்கும் சந்தை இருந்தது. அதில் அம்முதியவன் சென்று பார்க்கவே, அங்கு ஒருசிறுபாலகனைக் கையிற்தூக்கிப்பிடித்து விலை கூறிக் கொண்டிருந்தார்கள். அப்பாலகனைப் பெற்றெடுத்த தாயானவள் தரையிற் புரண்டு தன் அரியபாலகனைச் சிறிது நேரத்தில் பிரியப்போகிறேனே என்ற நினைவால் வருந்தியழுவதைக் கண்ணுற்றான். உடனே விருத்தாப்பியனின்மனம் இளகிப்போயிற்று. அப்பாலகனைமீட்டு, அவன்தாயிடம் ஒப்புவிக்கவேண்டுமென்ற அடக்கமுடியாத ஆசையால் ஏவப்பட்டான். பாலகனை மீட்பதற்கு அவனிடம் அந்தஇரத்தினத்தைவிட வேறொன்றுமில்லை. உடனே சட்டைப்பையில் கையைவிட்டு, அந்தமாணிக்கக்கல்லை எடுத்துக்கொண்டு சனக்கும்பலைத்தள்ளி உள்ளேசென்று, அதனைக்கொடுத்துப் பாலகனைமீட்டுச் சந்தோஷத்துடன்வந்து கலங்கியழுதுகொண்டிருந்த தாயிடம்கொடுத்து, "இதோ உன்பாலகன்; இவனை ஏற்றுக்கொள்; இப்போது இவன் உள்ளபடியே உனக்குச் சொந்தமாயிருக்கிறான்; இவனை அழைத்துச்செல்" என்றுசொல்லிவிட்டு, அதற்காகத் தாயின் வாயிலிருந்துவந்த நன்றியறிந்த வந்தனத்தை முதலாய்ச் செவியேற்காது அவ்விடம் விட்டகன்றான். ஆனால், பாலகனை மீட்டுத் தாயின் கவலையை ஒழித்ததினால் அவன்வதனத்தில் அச்சமயம் விளங்கியசந்தோஷம் பின்னர் அதிசீக்கிரம் பறந்துபோய்விட்டது.

"அந்தோ! என் கையில் ஒன்றுமில்லையே; பெத்லகேம் தெய்வீகக் குழந்தையின் திருப்பாதத்தில் காணிக்கையாகவைக்க அந்தோ! என்னிடம் ஒரு பொருளுமில்லையே; வெறுங்கையனாய் எப்படிப்போவேன்?" எனப் பெரிதுங் கலங்கிக் கலுழுவானாயினான். அவன் இவ்வாறு கண்ணீர்சிந்துவதை அங்குநின்றோர் பார்ப்பதுகண்டு அக்கும்பலைவிட்டுத் துரிதமாக வெளியே சென்று, "காணிக்கைப்பொருள் ஒன்றுமில்லாது பெத்லகேமுக்குச் செல்வதெப்படி? வீட்டுக்கே திரும்பிவிடலா"மென்று வந்தவழியே திரும்பினான்.

தான் முதலிற்கொண்ட கருத்தை நிறைவேற்ற வழியில்லாமல்போய்விட்டதேயென்ற மனக்கிலேசம் ஒருபக்கமும், பெத்லகேமுக்கு நடந்துசென்றதாலுண்டான தேகசிரமம் மறுபக்கமுமாக அவனைவருத்தவே களைமேலிட்டவனாய்ச் சோர்ந்துஅயர்ந்து ஒருமரத்தடியில் உட்கார்ந்து, அதன் மேல் சாய்ந்தான். சாய்ந்த சிலநிமிஷநேரத்துள் கண்களைமூடி நித்திரையிலாழ்ந்தான்.

நித்திரைகொள்ளுமுன் துக்கத்தால் வாடிவதங்கியிருந்த அவன்முகம் தூக்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

—: ஜெயம் :—

# தேம்பாவணியும் செபமாலையும்

(பண்டிதர் C. செல்வரத்தினம்)

## களிகூர்ந்தகாரணிக்கம்

### 5-ம் காரணிக்கம்–5-ம் பிரியதத்தம்

### 45. "சிலுவையில் மரித்தாரோ?"

தேவதாயாரும் சூசைமாதவனும் அன்று அனுபவித்த துயரத்தைப்பார்க்கச் சகியாதவன்போலச் சூரியனும் மேல்கடலிலே சென்றுமறைகின்றான். இருள் அதிகரிக்கின்றது. அவர்கள் ஓரிடமும் தங்காமல்தரியாமல் தேவகுமாரனைத் தேடிச்செல்லுகிறார்கள். அப்போது வற்றாத அருவிக்கண்ணாளாகிய மரியாள் துயராற்றாதவளாய்...

"கருணை கரனே களியா
லயனே கவினுர் மகனே
மருணை னயர்மா கடலில்
வருந்தக் கரையேற் றிடநீ
அருணை டியகன் றுறைகின்
றகமே அருவாய் கொல்லோ
தெருணை யகனே யென்றுள்
திறம்பா அருவிக் கண்ணாள்"

"கருணாகரனே! பேரின்பமிருக்கும் தேவாலயமே! அழகிற்சிறந்த என் மகனே! நான் துன்பக்கடலில் அமிழ்ந்திவருந்தும் தன்மைக்கிரங்கி என்னைக்கரையேற்றத் தயைபொருந்திய நீ அகன்றிருக்கும் இடத்தைக் காட்டாயோ?" என்று புலம்பிவருந்துகின்றாள். அவள்படுந் துயரைப்பார்த்துச் சகியாதமாதவனும்......

"இறந்தான் கொல்லோ முதலீ
றில்லோன் தனதார் தயையை
மறந்தான் கொல்லோ மறவா
அன்போன் கடல்சூழ் வையம்
துறந்தான் கொல்லோ உன்னை
என்னைத் துறந்தோ னிதுவே
அறந்தான் கொல்லோ மகனே
யறைகென் றழுதான் வளனே"

"தொடக்கமும்முடிவும் இல்லாதவனாகிய திருக்குமாரன் இப்பொழுது இறந்தானோ? என்றும்மறவாத அன்புடையோன் இன்று தன்தயையை மறந்தானோ? உன்னையும், என்னையும் விட்டகன்ற தேவகுமாரன்கடல்சூழ்ந்த இப்பூவுலகினை விட்டகன்றானோ? மகனே! இவ்வாறு செய்தல உனக்கு அறமாகுமா?" என்று அழுதுநிற்கின்றார்.

"அவர் எங்கே சென்றிருப்பார்?" என்பதுபற்றிய சிந்தனையிலே இருவரும் ஆழ்ந்துவிடுகிறார்கள். அப்போது தேவதாயின் மனதிலே ஓர்எண்ணம் உருவாகிறது. யேசு தவத்தைப்பற்றி எப்போதும் சிறப்பித்துச் சொல்பவரல்லவா? அதனால்அவர் தவம்செய்யக் காட்டுக்குப் போயிருப்பாரோ?

"மெய்யார் தவமே திருவின்
திருவே என்போன் வெந்தீ
மொய்யார் வனமே முடுகி
முனியா யினனோ என்றாள்"

உடலைவாட்டுந்தவமே செல்வத்துட் செல்வமென்று சொல்வோன் இன்று தீப்பற்றி எரியும் வனத்திற்குப்போய் முனிவனாயினனோ? என்கிறாள். சூசைமாதவர் அதுகேட்டுக் கானகத்தில் அவர்தவஞ்செய்யச் சென்றாலும் என்றாவது ஒருநாளைக்கு அவரைநாம் காணமுடியுமன்றோ? ஆனால்,......

"பொய்யார் புரையே துடைப்பப்
பொன்றல் சாத லித்தோன்
ஐயா ருயிரே யவனின்
றளித்தான் சொல்லோ என்றான்"

"பொய்விளைத்த மனிதரின்பாவங்களைத் துடைப்பதற்குத் தான் இறந்துபட வேண்டுமென்ற ஆசைமிகுதிப்பாட்டால் இன்று தன்உயிரைத் தந்திறந்தானோ?" என்கிறார்.

அதைக்கேட்டதும் தேவதாய்க்கு மூர்ச்சைஉண்டாகிவிடுகிறது. "அப்படியும் நிகழ்ந்திருக்கும்" என்று அஞ்சுகிறாள். அன்றொருநாள் தாங்கள் எகிப்துதேசத்தால் மீண்டுவரும்போது, திருக்குமாரன் உரைத்தவாசகங்கள் அவளது ஞாபகத்திற்கு வருகின்றன.

யூதேயாவுக்கு அண்மையிலேயுள்ள ஒருசோலை. அதிலேமூவரும் தங்கியிருந்து இளைப்பாறுகின்றனர். திவ்வியயேசு எதிரேதோன்றிய ஒருமலையைப்பார்த்துக் கண்ணீர்சிந்துகின்றார். அப்பொழுது அன்னையும் தந்தையும் அவர்அழுததற்குக் காரணம்கேட்டு நிற்கின்றனர். தேவகுமாரன் அம்மலையைச் சுட்டிக்காட்டிக் கூறுவார்.

இம்மலைக்கு 'மோரியா' என்று பெயர். சர்வேசுரனுடையகட்டளைப்படி ஆபிரகாம் தமதுமகனாகிய ஈசாக்கை இங்கேதான் பலியிடக்கொண்டு வந்தார். ஈசாக்கைப் பலிபீடத்தின் மீதிருத்தி வாளைஓங்கியபோது, சர்வேசுரன் அதைத்தடுத்து அவர்களை ஆசீர்வதித்தார். இது ...

"மன்னுயிர் அளிப்பநான்
மற்றோர் வெற்புமேல்
என்னுயிர் அளிப்பலென்
றிவையங் காயதே"

"மன்னுயிர்க்காக மற்றொருமலை மேல் என்னுயிர்தந்து இறப்பதற்கு முன்னடையாளமாகும் ... எனதுபலிபீடமாகிய சிலுவையைக்காணாது வருந்துகின்றேன்" என்றதும் உடனே தேவதூதர் சிலுவையொன்றை ஆகாயத்திற்காட்ட, அதைக்கண்டு "ஆ! எனது அன்பும், ஆபரணமுமாகிய சிலுவையே! நீயே எனதுசெங்கோலும், படைக்கலமுமாவாய்" என்கிறார்.

இவ்வாறுதேவதாய்தன்மனதிலுதித்த பழையசம்பவத்தைத் தன் துணைவருக்கும் ஞாபகமூட்டி, அங்ஙனமாகச் சிலுவையில் உயிர்விட்டிருப்பாரோ? என ஐயுற்று வருத்தமடைகிறாள்.

சூசையப்பரும் அதை ஆமோதிப்பார்போல......

'வையத் தடிவைத் துயர்வான்
மன்னன் கையிற சாயப்
பொய்யற் றவருந் தவன்முன்
பொலியக் கண்ட ஏணி
உய்யத் தரணி நானே
உலக்கும் சிலுவைக் கொப்பாய்
மெய்யற் றிவணே விளிவேன்
என்றா னன்றோ என்றான்"

அருந்தவனாகிய யாக்கோப்புகண்ட ஏணியே தனதுசிலுவையின் அடையாளமாகத் தான் ஒருசிலுவைமரத்தில் அறையப்பட்டு ஜெருசலேம் நகரில் இறப்பேனென்று தேவாலயத்தைக் கண்டபோது கூறினானன்றோ என்கிறார்.

அங்ஙனமாகத் திவ்வியகுமாரன் எடுத்துரைத்த உண்மைகளை எல்லாம் மீட்டுமீட்டுச் சிந்தித்துப்பார்க்கிறார்கள். "பிசாசுகள் மனுக்குலத்தார் மேல் வைத்த பழம்பழியைத் தீர்க்க மனுமகன் பாடுபட்டுயிர்துறப்பார்" என்ற வேதஉண்மையை அவர்கள் அறியாதிருக்கவில்லை. ஆயினும் "பிரியாத நேசத்தோடு வளர்க்கப்பட்ட பிரியகுமாரன் தமக்குக் கடைசிஆசீர்வாதமாவது தந்துபோகலாகாதா?" என்ற கவலை மாதாவை வருத்திவாட்டுகிறது. அதுபோலவே, கைத்தாதையும் "தேவகுமாரன் மனுமக்களுக்காகச் சிலுவையில் மரிக்கும்போது தானும் மற்றோர்சிலுவையில் மாணிக்கும்பாக்கியம் கிட்டவில்லையே" எனமயங்கிச் சோர்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்கு புதிய அர்ச்சியசிஷ்டர்கள்

சென்ற ஆனிமாதம் 13-ந் திகதியன்று தொமினிக்சவியோவுடன் அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்பெற்ற ஏனையநால்வரும் மூத். மரியா டிரேசா, மூத். பீற்றர் ஷானெல், மூத். கஸ்பார் டெல் புவலோ, மூத். ஜோஸ் மரியா பிஞ்ஞாதெலி என்பவர்களே. இருவாரகாலத்துள் ஆறுபுதிய அர்ச்சியசிஷ்டர்களைப் பிரகடனஞ்செய்ததோடு பரிசுத்தபாப்பரசர் கடந்த நான்கு நூற்றாண்டுகளிலும் தமக்குமுன்னிருந்த பாப்புமார்களில் ஒரேயொருவர்நீங்கலாக மற்றெந்தப் பாப்புமாரைக்காட்டிலும் மிகப்பெருந்தொகையானோரைத் திருச்சபைப்பலிபீடங்களின் வணக்கத்துக்கு உயர்த்தியிருக்கின்றார் — அதாவது அர்ச்சியசிஷ்டர்களாக்கியிருக்கின்றார். 1878-ம் ஆண்டு பரமபதம் அடைந்தவரான ஒன்பதாம்பத்திநாதர் 42 அர்ச்சியசிஷ்டர்களை — அதாவது தற்போதைய பாப்பரசரைக்காட்டிலும் ஒன்பது அர்ச்சியசிஷ்டர்களை அதிகமாக ஆக்கியிருக்கின்றார். அந்த 42 அர்ச்சியசிஷ்டர்களிலும் 1862-ம் ஆண்டு அத்திருப்பட்டம் சூட்டப்பெற்ற ஜப்பானிய வேதசாட்சிகள் 26 பேரும் அடங்குவார்கள். அன்றுநிகழ்ந்த அர்ச்சியசிஷ்டபட்டஞ்சூட்டும் திருவைபவத்தின்போது புதிய அர்ச்சியசிஷ்டர்களின் சுற்றத்தவர்களும், அவர்களின் சலுகையால் குணமடைந்த எட்டுப்பேரும் சமுகமாயிருந்தார்கள்.

## சர்வதேசசெபமாலைமகாநாடு

சர்வதேச செபமாலைமகாநாடு ஒன்று பாத்திமாபதியிலே சமீபத்தில் நடந்தேறியது. அதற்குப் போர்த்துக்கால்நாடு முழுவதிலுமிருந்து ஐந்துலட்சம் யாத்திரிகர்கள் சமுகமளித்திருந்தார்கள். இந்தமகாநாடு அத்திருசேத்திரத்தில் தேவதாயார் அருளிய முதலாவதுகாட்சியின் 37-ம் ஆண்டு நிறைவுவிழாவின்போதே நடைபெறலாயிற்று. 500 நோயாளரும் யாத்திரையிற் கலந்து அங்குசமுகமாயிருந்தார்கள். விழாநாளுக்கு முதனாள் சாயந்தரம் இரும்புத்திரைக்குப் பின்னால் திருச்சபை அனுபவிக்கும் வேதனைகளை ஞாபகப்படுத்துமாறு ஓர்மவுன மெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரம் நடைபெற்றது. செபமாலைப்பத்தியை விருத்திசெய்வதற்கென்று தொமினிக்கன்சபைக் குருமார் பாத்திமாபதியிலே சர்வதேச கருமசாலையொன்றை அமைக்கத் திட்டஞ்செய் திருக்கின்றனர்.

## பாப்பரசரின் திருநாள்

அர்ச். ஏயூஜினின் திருநாளாகிய பாப்பரசரின் பெயர்கொண்டபெருநாள் சமீபத்தில் வந்தபோது அவருக்குச் சோபனவாழ்த்துக் கூறும்படியாகச் சம்பேதுருவானவர் மகாலயசதுக்கத்தில் யாத்திரிகர்கள் குழாம் பெருந்திரளாகக் குழுமியிருந்தது. பரிசுத்தபிதா தமது வாசிகசாலையின் சன்னலண்டை காட்சியளித்து அவர்களை ஆசிர்வதித்தார். வத்திக்கான் இராச்சிய பணியாளர்களுக்கெல்லாம் அன்றுதினம் ஓர்விடுமுறைநாளாகும். வத்திக்கான் முழுவதும், பிறவிடங்களிலே அதற்குச்சொந்தமான கட்டடங்களிலும் பாப்பரசின் துவசங்கள் பறந்துகொண்டிருந்தன. அந்நாளின் பெரும்பகுதியை அவர் தமது சாய்ந்தமேசையருகே உட்கார்ந்து தம்முடையகடமைகளைக் கவனிப்பதில் செலவிடலாயினர்.

# கத்தோலிக்க



# சமாச்சாரம்

## அரசர்களும் தொழிலாளர்களும்

பரிசுத்தபிதா சமீபத்தில் விடுத்த ஓர்கட்டளையின்பேரிலே வருங்காலத்தில் சம்பேதுருவானவர் மகாலயத்தின்கண் பாப்பரசர்நடாத்தும் திருவைபவங்களின்போது தொழிலாளர்களின் பிரதிநிதிகள் அரசர்களுக்கும், இராச்சிய அதிபர்களுக்கும், ஸ்தானீகர்களுக்கும், பிரபுக்களுக்கும் அருளப்படுகின்ற கௌரவத்தைப் பெற்றுக்கொள்வார்கள். அம்மகாலயத்திலே பாப்பரசரின்பீடத்திற்கும், சிம்மாசனபீடத்திற்கும் அணித்தாகப் பாடகர்குழாம் மண்டபத்தின் கிழக்குப்புறமாகவுள்ள வில்மாடப்பக்கங்களின் உயர்மேடைகளிலே இவர்கள் ஆசனம்வகிப்பார்கள். இந்தத் தொழிலாளர் பிரதிநிதிகள் அங்கீகாரம்பெற்ற கிறீஸ்தவ தொழில் ஸ்தாபனங்கள், தொழிற்சங்கங்களின் தலைவர்கள், அங்கத்தவர்கள்மத்தியிலே அநேகமாகத் தெரியப்படுவார்கள்.

## பாலியரான புதிய அர்ச்சியசிஷ்டர்

பத்தாம்பத்திநாதருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டியதைத் தொடர்ந்து சென்ற ஆனிமாதம் 13-ந் திகதி ஞாயிறுவாரம் சம்பேதுருவானவர் மகாலயசதுக்கத்திலே, ஒருலட்சம்மக்கள் குழுமியிருந்த சமுகத்திலே, பரிசுத்தபாப்பரசரால் அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்பட்ட முத்திப்பேறுபெற்ற ஐவருள்ளும் அர்ச். ஜோண்பொஸ்கோவின் சிஷ்யரும், சிநேகிதருமான தொமினிக் சவியோ எனும் 14 வயதுடைய இத்தாலிய பாடசாலைப்பாலியரும் ஒருவராவர். திருச்சபைச்சரித்திரத்தில் வேதசாட்சிகளாக மரணமடைந்த பிள்ளைகள்நீங்கலாக எக்காலத்திலாவது அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்பெற்ற அதிகம்இளையவரான பாலியர் இவரே. திருச்சபையின் ஈறாந்தமகிமையை இவர்பெறுவதைக் காணவென்று அர்ச். ஜோண்பொஸ்கோவால் அடியிடப்பெற்ற சலேசியன்சபையாரால் நடத்தப்பட்டுவரும் கலாசாலைகள், கல்லூரிகளைச்சேர்ந்த முப்பதினாயிரம்பிள்ளைகள் அங்குபிரசன்னமாயிருந்தார்கள்.

## குணமடைந்த கன்னியாஸ்திரி

பத்தாம்பத்திநாத பாப்பானவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டும் திருவைபவத்தின்போது அவரதுசலுகையால்சென்றவருட ஆனிமாதம் திடீரென அற்புதமாகக்குணமடைந்த சங். மேரி மாட்டீன் தாயாரும் அமெரிக்க ஐக்கியதேசத்திலிருந்து போய் அங்கு சமுகமளித்திருந்தார். பிராணபத்துக்குரியதாய் இவருக்கு ஏற்பட்ட நோயானது நாளுக்குநாள் பயங்கரவிதமாய் அதிகரித்துவரலாயிற்று. அதனால்இவர் இன்னும் ஆறுவாரத்தில்இறந்துவிடுவாரென்று டக்றர்மார் கூறினர்கள். பத்தாம்பத்திநாதரின் திருப்பண்டம் ஒன்றை [illegible] மாட்டீன்தாயார் ஓர் நவநாள் தொடக்கி அவருடைய சலுகையை இரந்துநின்றார். நவநாளும் முடியவே அவருடையநோயும் நீங்கியிருந்ததைக்கண்டு டக்றர்மார் ஆச்சரியவசத்தராயினர். கார்மேல்சபையைச் சேர்ந்த மாட்டீன்தாயார் அமெரிக்கஐக்கியதேச கோலிங்ரன்மேற்றிராசனத்திலே வயோதிகர்சாலை ஒன்றின் தலைவியாக இருந்துவருகின்றார்.

## ஏழைகளின்அன்பரான பாப்பானவர்

அர்ச். பத்தாம் பத்திநாதர் அப்போது ஓர்சிறுகிராமத்திலே விசாரணைப்பங்குக்குருவராய் இருந்தபோது, சனங்களாலே அவர் வெகுவாகநேசிக்கப்பட்டுவந்தார். ஏனெனில், அவர் தம்மிடம்இருந்தவைகளையெல்லாம் ஏழைகளுக்குச் செலவிட்டார். சிலவேளைகளில் பணந்தட்டுப்படும்போது தமது வெள்ளிக்கரண்டியையும், கார்ப்பையும் அடகுவைத்துப் பணங்கண்டுகொள்வார். மேற்றிராணியாராக வந்தபின்னும் அவர் தம்மிடம்இருப்பவைகளை ஏழைகளுக்குத் தியாகஞ்செய்துவந்தார். ஓர்முறை தமது மேற்றிராணித்துவ கணையாழியையே அடகுவைத்துவிட்டார். வெனிஸ்நகரிலும் கருதினல் சார்த்தோ ஏழைகளின் அன்பரெனக் கொண்டாடப்பெற்றுவந்தார். அங்கே இருந்துவரும்போது ஓர்நாள் அவருடைய சகோதரி அவரைநோக்கி: [illegible] தங்கக் கடிகாரம் எங்கே?" என்று கேட்டபோது, "ஏழைகளுக்குக் கொடுக்கப் பணமில்லாததால் அதைவிற்றுவிட்டோம்" என்று அவர் பதிலளித்தார்.

## அதிவிருத்தாப்பிய மேற்றிராணியார்

அர்ச். பத்தாம் பத்திநாதர் பாப்பானவராய் இருந்தபோது அவரால் நியமனஞ்செய்யப்பெற்ற மேற்றிராணிமார்களில் ஒருவர்தான் இன்று உலகின் அதிவிருத்தாப்பிய மேற்றிராணியாராக விளங்குகின்றார். இவர் கில்லாலோ (அயர்) நகர் மேற்றிராணியாரான 95 வயதுடைய மிக்கேல் பொகாட்ரி ஆண்டவரே. 1904-ம ஆண்டு புரட்டாசிமுதல் இவர் ஓர்மேற்றிராணியாராய் இருந்துவருகின்றார். மேற்றிராணியாராக நியமனம்பெற்றபின் 1907-ம ஆண்டு இவர் முதன்முதலாக ரோமாபுரி சென்று பத்தாம்பத்திநாதரின் பேட்டிபெற்றபோது, இந்தக் 'கிராமிய பாப்பானவர்' மட்டிலே ஆழ்ந்தமனப்பதிவு கொள்ளலாயினர். "பத்தாம் பத்திநாதர் இயற்கைக்கு மேற்பட்ட தேவபக்தியும், குணப்பண்புமுள்ள ஓர்மனிதராயிருக்கக்கண்டோம்; கண்டதே அவரை ஓர் அர்ச்சியசிஷ்டராகக் குறிப்பெடுத்துக்கொண்டோம்" என அப்போது இவர் கூறலாயினர். இவர் பூச்சியமாகப் பேணி வைத்திருப்பவைகளுள் பத்தாம்பத்திநாதரின் பிரதிமையும்ஒன்றாகும். அதில் பத்தாம்பத்திநாதரே தமது கரத்தால்எழுதிய ஓர் ஆசிச்செய்தி அடங்கியிருக்கிறது.

## பேதுருவானவர் மகாலயத்தில்

அர்ச். பத்தாம்பத்திநாதரின் திருமேனியானது அவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்பட்ட சுபநாளுக்குமறுநாள் சம்பேதுருவானவர் மகாலயத்திலிருந்து அர்ச். மேரிமேஜர் மகாலயத்துக்குப் பெரியஊர்வலமாகக் கொண்டுசெல்லப்பட்டு, அங்கே ஒருவாரமட்டும் விசுவாசிகளின் வணக்கத்துக்காகப் பூச்சியமாக வைக்கப்பட்டிருந்தபோது, அங்குள்ள இருபது பலிபீடங்களிலும் ஒப்புக்கொடுக்கப்பட்ட திவ்வியபூசைகளிலெல்லாம் ரோமர்களும், பிறயாத்திரிகர்களுமாக ஐந்துலட்சம்பேர்சமுகமளித்திருந்தார்கள். அவர்திருமேனியை வணங்கிப் பக்திசெய்வதற்காக அதிகாலைமுதல் இரவுவரையிலே மக்கள் அம்மகாலயத்தைநோக்கிச் சரிந்தவண்ணமிருந்தார்கள். அவர்களின் செபமாலைகள், பரவணிக்கங்கள், மற்றும் பக்திக்குரிய சாமான்களை அவரது திருமேனியில் தொட்டுக்கொடுப்பதிலே சிலகுருமார் ஈடுபட்டிருந்தனர். பின்னர் அவரின்திருமேனியானது சம்பேதுருவானவர் மகாலயத்துக்குப் பெரியஊர்வலமாக மறுபடியும கொண்டுபோகப்பட்டபோது அதைக் கண்டுகொள்வதற்காக ரோமைநகர் வீதிகளில் இரண்டுலட்சம் மக்கள்வரையில் கூடிநின்றார்கள். அவர்திருமேனி வெனிஸ்நகரில் அல்ல சம்பேதுருவானவர்மகாலயத்திலேயே நிரந்தரமாக இருந்துவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடி மாதம்

போதுக்கருத்து:— அந்நிய நாடுகளிற்போய்க் குடியேறச்செல்லுகிறவர்களின் ஆத்துமபராமரிப்புக்காக வேண்டிக்கொள்ளுவது.

மிஷன்கருத்து:— அங்கோலாவிலும், மொசம்பிக்கிலுமுள்ள திருச்சபைக்காக மன்றாடிக்கொள்ளுவது.

சபாத்துதிகாயவவேலதன்

**1954-ம் ஆண்டு**
**ஆனி மாதம் 1-ந் திகதி**

## குருத்துவ வெள்ளியூபிலி

தங்கள் நவசந்நியாச வாழ்க்கைக் காலத்திலும், தங்களது குருத்துவ வேதசாஸ்திர பயிற்சிக்காலத்திலும் உடன்பிறந்த ஒரேசகோதரர்கள் போன்று உடன்வகுப்பு மாணவர்களாய் விளங்கியிருந்து, ஏககாலத்திலே குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்று, இன்று ஸ்ரீலங்காவிலே இரு வேத சூரியர்களாகவும், அமலோற்பவ மரியநாயகிசபையிலே இரு ஞானச்சுடர்களாகவும் பிரபைகாலித்துவருகின்ற கொழும்பு அதிமேற்றிராணியாராகிய மகாமேன்மைதங்கிய தோமஸ்கூறே ஆண்டவர்அவர்களும், எமது யாழப்பாண மேற்றிராணியாராகிய மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்களும் நிகழும்ஆடிமாதம் 7-ந் திகதியாகிய வருகிறபுதன் கிழமை தங்கள்குருத்துவ இருபத்தைந்தாம்வருட வெள்ளியூபிலிவிழாவைக் கண்டுகளிக்கவிருக்கிறார்கள் எனும் சுபசெய்தியானது அவர்களின் ஞானமக்களுக்கெல்லாம் ஞானமனோகரம் விளைக்கும் ஓர் மங்கலகரமான செய்தியாகும். நவசந்நியாச—குருத்துவஉடன்மாணவர்கள் என்றமட்டிலும், கொழும்பு அதிமேற்றிராசனத்தின் முதற்சுதேசஅதிமேற்றிராணியாரும், யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் முதற்சுதேசமேற்றிராணியாரும் என்றமட்டிலும் இலங்கைத் திருச்சபைச் சரித்திரத்திலே இவர்களின் பெருமைவாய்ந்தநாமங்கள் பொன்னட்சரங்களால் பொறிக்கப்படத்தக்கன.

கொழும்பு அதிமேற்றிராணியார் சிங்களசாகியத்தில் உதித்த இலங்கையின் முதல்அதிமேற்றிராணியார். யாழ்ப்பாணமேற்றிராணியார் தமிழ்ச்சாகியத்தில் உதித்த இலங்கையின் முதல் மேற்றிராணியார். ஆகவே, எமது செல்வநாட்டின் திருச்சபை ஆட்சியிலே முன்னில்லாத விதமாகப் பெரிதும்காத்திரமும்,உத்தரவாதமும்,மிக்கஉயர் பதவிகளுக்குத் தேவகிருபையினாலும், பரிசுத்தஸ்தானத்தின் தயவினாலும் நியமனம்பெற்ற இவ்விரு இராசகுருப்பிரசாதிகளும் தம்முன்னோரின் பெருமைநிலைகுன்றாது, வேதவிருத்தியிலும், மக்களின் ஞானவளர்ச்சியிலும் அன்னார்கொண்டிருக்த பேரார்வங்குன்றாது தமது ஞானமந்தைகளின் சுபீட்சத்திற்காக அல்லும்பகலும் அயராது உழைத்து அருந்தொண்டாற்றி வரக்காண்பது ஆனந்தமே.

யூபிலிநாயகரான கொழும்பு அதிமேற்றிராணியார் இன்று நம்மத்தியிலே இருக்கின்றார். ஆம், அவர் தற்போது மருதமடுத்திருப்பதியின் ஆடிப்பெரிய மகோற்சவத்திற்குச் சமுகமளித்து நம்மத்தியிலே நிற்கின்றார். மரியாயின் இப்புனிதவருடத்திலே ஸ்ரீலங்காவின் தலைசிறந்த மாதாவின் திருசேத்திரமாகிய மருதமடுத்திருப்பதி யாத்திரிகர்களுள் அவர் ஓர்மகாயாத்திரிகராகக் காட்சியளிக்கின்றார். யூபிலிநாயகரான நம்மேற்றிராணியாண்டவர் மரியாயின் இப் புனிதவருடத்திலே லூர்துதிருப்பதிமுதலாம் ஐரோப்பியநாடுகளிலுள்ளமாதாவின் பிரபலதிருசேத்திரங்களுக்கு யாத்திரை செய்துவருகின்றார். நமது பரலோகஅன்னை யூபிலிநாயகர்களான இவ்விருஆண்டகைகளையும் தமது விசேஷபாதுகாவலில் வைத்துப் பரிபாலித்து அவர்களின் ஞானஆட்சி சிறந்தோங்கச் செய்யவேண்டுமெனப் பக்திவேகத்துடன் பிரார்த்தித்துநிற்கின்றோம்.

நிற்க, கொழும்பு அதிமேற்றிராணியாண்டவர் தனதுபிள்ளைகள்இருவரையுமே தேவதொண்டுக்கு அர்ப்பணஞ்செய்த ஓர் உத்தம கத்தோலிக்ககுடும்பத்தில் உதித்தவர். நமதுயாழ்ப்பாண மேற்றிராணியாண்டவர் தனதுஐந்துபுதல்வர்களில் நால்வரைத் தேவதொண்டுக்குஅர்ப்பணஞ்செய்த மற்றோர் உத்தம கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர். குடும்பங்களிலே குருத்துவஅழைத்தல் முதலாம் தேவஅழைத்தல்கள் பெருக்கமடையும்படியாகவும், குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரிமார் அதிகரிக்கும்படியாகவும் கத்தோலிக்க உலகமுழுவதும் கையெடுத்துக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே நமது யூபிலிநாயகர்களைத் தேவதொண்டுக்குத் தியாகஞ்செய்த பாக்கியமான இருகுடும்பங்களும் சகல கத்தோலிக்க குடும்பங்களுக்கும் கலங்கரைத் தீபங்கள்போல் விளங்குகின்றன. அவைகளை எடுத்துக்காட்டாகக் கொண்டு பக்தியுள்ள ஒவ்வோர்குடும்பமும் அத்தகைய தியாகங்களைச்செய்ய முன்வர வேண்டுமென்பதே இந்த வேளை நாம் எடுத்துக் கூறத்தகும் சிறந்தஆலோசனையென்க.

## "கண்டு பிடியுங்கள்"

சென்றவாரம் பாலர்பக்கத்திலே 'சகாசகாரன்' எனும் சகோதரர் "செம்புகத் தடி பாயாது" என்று மாறுபட்டுநிற்கும் சொற்றொடரைத் தக்கவாறு இடம்மாற்றி அமைக்கும்படி கேட்டிருந்தார். தம்பிமாரும், தங்கைமாருமாகப்பலர் விடையனுப்பி வைத்திருக்கின்றனர். மறுமுறை இவர்களின் நாமங்கள் பாலர்பக்கத்தில் வெளிவரும்.



## சதாசகாயமாதா கோணம்

### பாவியைத்தரிசித்த பரிசுத்த தேவமாதா

மார்த்தா தன்சிறுமி றோஸ் படுக்கைக்குப்போகுமுன்னர் கதையொன்று சொல்லிக்கொண்டிருந்தாள். அப்போது சிறுமியின்தகப்பன் வீடுவந்து சேர்ந்தார். மார்த்தா ஒவ்வொருஇரவும் நசரேத்தின் திருக்குடும்பத்தோடு சம்பந்தப்பட்ட சிறு சிறுகதைகள் சொல்வதுவழக்கம். குழந்தைப்பராயத்திலேயே வேதகல்வியைத் தக்கமுறையாக ஊட்ட இது ஓர்சிறந்தவழியென்று அவள் அறிந்திருந்தாள்.

றோஸின் தகப்பனுக்குப்பேர் அந்தோனி. அவர் தனதுமேற்சட்டையைக்கழற்றி உடுப்புத்தாங்கியிற் தூக்கிவிட்டுத் தாயும்மகளும்இருந்த இடத்துக்குச்சென்றார். அப்போது கதையும் முடிவடைந்துவிட்டது.

"நமதுகண்மணியைக் கொஞ்சிவிட்டு நித்திரைக்கனுப்ப நல்லநேரம் பார்த்து வந்துவிட்டேன்" என்று கூறிக்கொண்டு பிள்ளைஅண்டை போனார். தகப்பனும் மகளும் மாறிமாறி முத்தங்கொடுப்பதைப் பார்த்துக்கொணடிருந்த தாயின் மகிழ்ச்சியைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? அந்தோனி மகளைப்பார்த்து: "பிள்ளே! உனது செபங்களைச் சொல்ல மறந்துபோகாதே; அத்தோடு உனது சித்தப்பா தோமாஸ் இருக்கிறாரே; அவருக்காகவும் ஒருவிசேஷசெபம் சொல்லு" என்றார்.

றோஸ் சற்றுநேரம் யோசித்தபின்னர்: "ஐயா! சித்தப்பாவுக்காக ஏன் விசேஷமாகச் செபம்சொல்ல வேண்டும்? அவர்தானே என்மட்டில் மிக்க நேசமுள்ளவராய் இருக்கிறார்; பாவிகளுக்காகவும், கெட்டவர்களுக்காகவும் நாம் மன்றாடவேண்டும்என்று உபாத்தியாயர் சொல்லிக்கொடுத்தார். சித்தப்பா என்ன கெட்டவரா?" என்று கேட்டாள். தகப்பன் சிரித்துக்கொண்டு: "இல்லைமகளே! உனது சித்தப்பா கெட்டவரல்ல; அவர் தட்டத்தனியே வசிக்கிறார்; அவர் கதைக்கிறதற்கு ஒருவருமில்லை; நீ நல்ல அதிர்ஷ்டசாலி; உனக்கு ஐயா, அம்மா இருக்கிறார்கள்; ஆனால், சித்தப்பாவுக்கோ ஒருவருமில்லை; இது மரியாயின் புனிதவருட மாகையால் அவ உனது சித்தப்பாவைத் தரிசிக்க வேணும்என்று ஒருசிறுசெபம் சொல்லிக்கொள்; தம்பிள்ளைகள்மேல் இந்த வருடத்தில் அவ அளவில்லாத ஆன்ம சரீர சகாயங்களைப் பொழிந்தருளக் காத்துக்கொண் டிருக்கிறா; இப்போ படுக்கைக்கு ஓடிப்போ; ஆனால், அந்தச் சிறுசெபத்தை மாத்திரம் மறந்துபோகாதே" என்றுசொன்னார்.

"ஐயா! நான் மறக்கவே மாட்டேன்" என்று பதில்கூறித் தாயையும், தகப்பனையும் முத்தமிட்டுவிட்டுச் சிறுமிறோஸ் படுக்கப்போய்விட்டாள்.

தங்கள்மகள் போனபின்பு அந்தோனியும், மார்த்தாவும் நடுச்சாலைக்கு வந்து கதைத்துக்கொண்டிருந்தார்கள். அப்போது மார்த்தா தன் கணவனைப் பார்த்து:

"இன்று நீங்கள் என்மைத்துனர் தோமாஸைச் சந்தித்தீர்களோ? என்று கேட்டாள்.

"சந்தித்தேன். ஆனால், ஒருவித பிரயோசனமும்இல்லை; மெத்தப்பிடிவாதங் காட்டுகிறார்; மூர்க்கனும் முதலையுங் கொண்டதுவிடா என்றதுபோல இருக்கிறது; ஆனால், நான் நம்பிக்கை இழக்கவில்லை; இத்தனைவருடங்களுக்குப்பின் பாவசங்கீர்த்தனத்துக்குப் போக அவருக்குத் திடனில்லை; அவரின் இருதயத்தில் விசுவாசம் இன்னும் உண்டு; அவர்இன்னும் முற்றாய்க்கெட்டுப் போகவில்லை; நாம் செய்யக்கூடியது அவருக்காக மன்றாடுவதேஒழிய வேறொன்றும்இல்லை."

சரி, நேரம்போகிறது. செபமாலை சொல்லுவோமா? என்றார். அவரின் பாரியார் 'ஓம்' என்று சொல்லிவிட்டுச் செபமாலைஎடுப்பதற்காக இருக்கை விட்டெழுந்தாள்.

அந்தோனியின்தம்பியார் தோமாஸ் மனந்திரும்பி மந்தையிற் சேர்ந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒவ்வொருஇரவும் இருவரும் செபமாலைஓதி ஒப்புக்கொடுப்பார்கள். இது மரியாயின்வருடம். இரக்கத்தின் மாதாவுக்குச் செபங்கள் ஒப்புக்கொடுக்கவும், வழிதவறி அந்தகாரத்தில் அலைந்துதிரியும் பாவிகளைத் தேவனின் பக்கமாகத் திருப்பிக்கொண்டுவரும்படி இரந்து கேட்கவும் இந்தப் புனிதவருடத்திலும்பார்க்க உகப்பானகாலம் வேறில்லை எனலாம்.

ஒருநாள் மார்த்தா தன் கண்களைக் கசக்கிக்கொண்டு தான்காண்பது கனவோ நனவோ என்று யோசித்தாள். அன்று காலை அவள் படுக்கை அறைத் தூசியைத் துடைத்து, அங்கிருந்த தேவமாதாசுரூபத்தின் முன்பாகப் புதியபுஷ்பங்கள்சாத்தி அதனை அலங்கரித்திருந்தாள். ஆனால், என்னஅதிசயம் இப்போ சுரூபத்தைக் காணவில்லை. றோஸைக் கூப்பிட்டாள். அவளின் அங்கலாய்ப்பை இன்னுங் கூட்டவாக்கும் றோஸையும் வீட்டிற் காணவில்லை. சரி, அவள் தன் சித்தப்பா வீட்டுக்குப் போனாலும் போயிருக்கலாம்; ஆனால், தேவமாதாவின் சுரூபந்தான் எங்கேஎன்று யோசித்துக்கொண்டு வீட்டின் ஒவ்வொரு அறையையும், மூலைமுடுக்குகளையும் தேடிப்பார்த்தாள். சுரூபத்தைக் காணவில்லை....

## பூசைப்பரிசாரகர் விழா

விடத்தல்தீவுப் பூசைப்பரிசாரகர்சங்கம் அர்ச். ஞானப்பிரகாசியார் திருநாளைச்சென்ற 20-6-54 ஞாயிற்றுக்கிழமை சிறப்பாகக்கொண்டாடியது. முதல்நாள்மாலை அர்ச். ஞானப்பிரகாசியாரின் திருச்சுரூபம் மலர்களால் எழிலுறச் சிங்காரிக்கப்பெற்ற ஒருசிங்காசனத்தின்கண் எழுந்தருளச்செய்து வைக்கப்பட்டிருந்தது. கட்டளைக்குருவர் வண. ஓம்லோசுவாமியார் வேஸ்பர்பாடினார். அதன்மேல் சங்கஅங்கத்தவர்களின் சங்கீதஓசையின்மத்தியில் திருச்சுரூபம் கோவில்முகப்பிற்குக் கொண்டுசென்று ஸ்தாபிக்கப்பட்டது. மறுநாட்காலை 7மணிக்குத் திவ்விய பூசை நிறைவேற்றியபோது தெரேசம்மாள்கூட்டப்பிள்ளைகளின் சங்கீதஓசை இன்பம்பயப்பதாயிருந்தது. பிற்பகல் 4-30 மணிக்கு வருடாந்தப் பொதுக்கூட்டம் குருவர்தலைமையில் நடந்தேறியது. அவரால் "ஒற்றுமையுடன் வாழ்வீர்களாக!" என்பதைப் பீடிகையாகக்கொண்டு ஓர் சொற்பொழிவு இனிதேநிகழ்த்தப்பட்டது. முடிவில் தோட்டஉபசாரணை நடந்து தலைவர் தே. மரியநாயகம் என்பவரின் நன்றியுரையோடு விழாஇனிதுநிறைவேறியது.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிகழும் 7-7-54 புதன்கிழமையன்று
தமது குருத்துவ வெண்பொன் யூபிலியைக்
கண்டுகளிக்க விருக்கும்
கொழும்பு அதிமேற்றிராணியாராகிய
மகாமேன்மைதங்கிய தோமஸ் கூறே,
O.M.I., B.A., Ph.D., D.D.
ஆண்டவர் அவர்கள்



மரியாயின்

புனித வருட முடிவு விழாக்

## கொண்டாட்டம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் மரியாயின் புனிதவருடத்தை முன்னிட்டு நடைபெறும் விழாக் கொண்டாட்டங்கள் ஞானோபதேசப் பொருட்காட்சியோடும், மரியாயின் சமாகமத்தோடும் சிறப்பாக முடிவாகும்.

ஐப்பசிமாதம் 8-ந் திகதி வெள்ளிக்கிழமை காட்சி திறந்துவைக்கப்பட்டு மூன்றுநாட்களாக நடைபெறும்.

யாழ்ப்பாணமேற்றிராசனத்துள்ள எல்லாக் கத்தோலிக்கபாடசாலைகளும் இவ்வைபவங்களிற் கலந்துகொள்ளும்.

கத்தோலிக்க சித்திரக் கலைவல்லோரிடமிருந்து காட்சிக்குவைப்பதற்கு ஓவியங்கள் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

காட்சியில் முதலிடம் பெறுவோருக்குப் பரிசில்களும், தகுதிப் பத்திரங்களும் வழங்கப்படும்.

ஐப்பசித்திங்கள் 10-ம் நாள் ஞாயிறுவாரம் மரியாயின் சமாகமம் நிறைவாகும்.

சம்பத்திரிசியார் கல்லூரிமைதானத்தில் இவ்வைபவங்கள் நடந்தேறும்.

St. Henry's College
Ilavalai.

## பாடசாலை மாணவரின் மருதமடுத் திருயாத்திரை

அன்பான தலைமை ஆசிரியர்களே!

(1) எமது மேற்றிராசன காரியநிர்வாக சபையாரால் தீர்மானிக்கப்பட்டுள்ளபடி, மரியாயின் வருடவிழாக் கொண்டாட்டங்களில் ஒன்றான "பாடசாலைமாணவரின் மருதமடுத் திருயாத்திரை" இவ்வருடம் புரட்டாசி மாசம் 16-ந் திகதி தொடக்கம், 20-ந் திகதிவரையிலும் நடைபெறும்.

(2) யாத்திரைக்குரிய நிகழ்ச்சிகள் வருமாறு:
16-ந் திகதி வியாழன்—பெண்பிள்ளைகள் மடுவுக்குப் பிரயாணமாவர்.
17-ந் ,, வெள்ளி—மடுவில் பெண்கள் தினம்.
18-ந் ,, சனி—பெண்பிள்ளைகள் மடுவிலிருந்து திரும்புவர். ஆண்பிள்ளைகள் மடுவுக்குப் பிரயாணமாவர்.
19-ந் ,, ஞாயிறு—மடுவில் ஆண்கள் தினம்.
20-ந் ,, திங்கள்—ஆண்பிள்ளைகள் மடுவிலிருந்து திரும்புவர்.

(3) மடுவுக்குப் போவதும் திரும்புவதும்: பகற்புகையிரத மூலமாகவே நடைபெறும். மடுறோட் ஸ்தானத்திலிருந்து கோவிலுக்குப் போய்வர விசேஷபஸ்வண்டிகள் ஒழுங்குசெய்யப்படும்.

(4) பெண்பாடசாலைகளிற் படிக்கும் 12 வயதிற்குட்பட்ட ஆண்பிள்ளைகள் பெண்களுடன் பிரயாணம் செய்வர். ஆடவரான ஆசிரியர்களால் நடத்தப்படும் பாடசாலைகளிலுள்ள 10 வயதிற்குட்பட்ட பெண்பிள்ளைகள் தங்கள் மூத்தசகோதரர்களுடன் பிரயாணம் செய்யலாம்.

(5) குறைக்கப்பட்ட புகையிரதப் பிரயாணச்செலவின் விபரம்:
(a) 12 வயதுக்குட்பட்ட, 20 பேருக்குக் குறையாத பிரயாணிகளுக்குப் போய்த் திரும்பிவரும்செலவு, ஒற்றைப்பிரயாணச் செலவின் $\frac{5}{8}$ பங்குஆகும்.
(b) 12 வயதுக்கு மேற்பட்ட 10 பேருக்குப் போய்த் திரும்பிவரும் செலவு, ஒற்றைப்பிரயாணச் செலவின் $1\frac{1}{4}$ பங்கு.
(c) இவ்வித குழுக்களுடன் பிரயாணம்செய்யும் ஆசிரியர்களுக்கும் போய்த் திரும்பிவரும்செலவு, ஒற்றைப்பிரயாணச் செலவின் $1\frac{1}{4}$ பங்குஆகும்.

(6) மடுஇறக்கத்திலிருந்து கோவிலுக்குப்போய்வர ஏற்படும்செலவுக்கு வயதுக்கட்டுப்பாட்டு நியமம்இல்லை. ஆளுக்கு 60 சதவீதம் கொடுக்கவேண்டும்.

(7) பாடசாலையில்இருந்து கிட்டிய புகையிரதஸ்தானத்திற்குப் போகவும், திரும்பிவரவும் செய்யவேண்டிய ஏற்பாடுகளுக்கும், பிரயாணத்தின்போது பிள்ளைகளுக்குக் கொடுக்கவேண்டிய உணவுக்கும் அந்தந்தக் குழுவினரே பொறுப்பாளராவர்.

(8) யாத்திரையில் பங்குபற்றவிருக்கும் ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் தொகையையும், புறப்படும் புகையிரதஸ்தானத்தின் பெயரையும் எமக்கு வருகிற ஆடிமாதம் 25-ந் தேதிக்குமுன் அறிவிக்குக. அப்பொழுதே புகையிரதப்பகுதி அதிகாரிகளுடன் யாத்திரைக்கான தகுந்தஒழுங்குகளை முன்னதாகச் செய்யமுடியும்.

(9) மன்னார்ப்பிரிவிலுள்ள பாடசாலைகள் தத்தம்இடங்களிலிருந்து மடுக்கோவிலுக்குப் போய்த்திரும்பிவருவதற்கான ஏற்பாடுகளைத் தாமே செய்துகொள்ளவேண்டும்.

(10) மடுத்திருப்பதியில் தங்கும்காலத்தில் கொடுக்கவேண்டிய உணவுச் செலவுவீதம் வருமாறு:
(a) 12 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்குச் செலவு ரூபா 3-00. ஆசிரியருக்கு ரூபா 4-00.
(b) 12 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்குச்செலவு ரூபா 2-00.

(11) மடுயாத்திரைக்குப் பயணமாகும் ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் தொகையையும், அன்னாரின் வயதுவிபாங்களையும், உணவுச் செலவையும், மடுஇறக்கத்திலிருந்து கோவிலுக்குப்போக ஏற்படும் பிரயாணச்செலவையும் ஆடிமாதம் 25-ந் தேதிக்குமுன் தயவுசெய்து எமக்கு அனுப்பிவைக்கவும்.

(12) "மனிஓடர்," "போஸ்றல்ஓடர்" என்பன பின்வரும் விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்:
(Rev. Fr. B. Deogupillai, Ilavalai)
வண. வ. தியோகுப்பிள்ளைசுவாமியார், இளவாலை.
அல்லது
Rector, St. Henry's College, Ilavalai)
அதிபர், அர்ச். என்றிஅரசர் கல்லூரி, இளவாலை.

(13) ஏனையவிபரங்கள் பின்னால் அறிவிக்கப்படும்.

**B. Deogupillai, Mis. Ap.**
அக்கிராசனர்
யாத்திரை உப நிர்வாகசபை.

22-6-54

### புதியகவர்னர்–ஜெனறல்

இலங்கைப்புதிய கவர்னர்–ஜெனறலாக நியமனம்பெற்றுள்ள சேர் ஒலிவர் குணதிலக அவர்கள்சென்ற வெள்ளிக்கிழமைகாலைதமதுநிதிமந்திரிபதவிஇராசிநாமாவைக் கவர்னர்–ஜெனறலிடம் சமர்ப்பித்திருக்கின்றார். அத்துடன் தமது செனற்றர்பதவியையும் இராசிநாமாச் செய்திருக்கின்றார். இந்த இராசிநாமாக்கள் இன்றுமுதல் நடைமுறைக்குவரும். இம்மாதம் 19-ந் திகதியன்று கவர்னர் – ஜெனறல்பதவியை ஏற்பதற்குத்தயாராகச் சேர் ஒலிவர் குணதிலக இன்றுமுதல் இராணிமாளிகையில் வேலைசெய்துவருவார்.

### கூட்டுறவாளர் தினவிழா

அகில–உலகக் கூட்டுறவாளர் தினவிழா யாழ்ப்பாண நகரமண்டபத்திலே நிகழும் ஆடிமாதம் 3-ந்திகதியாகிய நாளை நின்றுவரும் சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணி முதல் 7-15 மணி வரையில் கொண்டாடப்படவிருக்கிறது. பாதுகாப்பு – வெளிநாட்டுவிவகார மந்திரி காரியாலய நிரந்தரகாரியதரிசியும், ஆரம்பத்திலே கூட்டுறவுஅபிவிர்த்தித் தலைவராய் இருந்தவருமான திரு. ஜி. டி சொய்சா அவர்கள் பிரதான பேச்சாளராயிருப்பார். மற்றும் பிரபலஸ்தர் சிலரும் அதிற் பேசுவார்கள். சங்கீதக்கச்சேரி, நடனம், நாடகம் ஆகியவற்றுடன் கொண்டாட்டம் முடிவாகும்.

### நன்றியறிந்த தோத்திரம்

எனக்கு இரு வருடங்களுக்குமுன் ஏற்பட்ட கான்சர் என்னும் புற்றுநோய் சத்திரவைத்தியம் செய்தும் குணப்படாமல், சதாசகாய மாதாவின் இரக்கத்தால் அற்புதவிதமாய்ப் பூரண சுகமடைந்தேன். அவவுக்கு என் நன்றியைக்காட்ட எங்கள் ஊரிலும் சதாசகாய மாதாவின் பக்தியைத் தொடக்கியிருக்கிறேன். அவவின் திருநாமம் என்றும் புகழப்படுவதாக.

ஜே. ஏ.

### நன்றியறிந்த தோத்திரம்

அருளப்பெற்ற இலகுவான சுகபிரசவ ஆசீர்வாதத்தையிட்டும், சுக பலமுள்ள குழந்தையை அருளியதையிட்டும் திரு இருதய ஆண்டவருக்கும், அர்ச். சதா சகாயமாதாவுக்கும், அர்ச். யூதாததேயுவுக்கும், கீழ்திசையிலிருந்துபோய்த்தேவபாலனைத் தரிசித்த மூன்று இராசாக்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்து நேர்த்திப்படி இதனைப் பிரசித்தம்செய்கின்றோம்.

M. J. S. & FAMILY.

உன் ஊரில் இருக்கும் ஆகப் பெரிய ஆவலாதி பேசுகிறவனுக்கு உன் கிளியைப் பயமில்லாமல் விற்கக் கூடிய விதமாகச் சீவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

இன்று நான் உங்களைச் சந்திக்க வென்று பாடசாலைக்கு வந்தேன். பாடசாலையில் ஓர் அரவமும் இல்லை. மேசை, நாற்காலிகள் எல்லாம் காலியாய் இருந்தன. என்னவென்று விசாரித்த பொழுது மடுவிடுதலை என அறியவந்தேன்.

இந்தவருடம் மரியாயின் புனித ஆண்டு. ஆகையால், இந்தத் திருப்பதியைச் சந்தித்து ஆத்தும பலன்களைத் தேடுவது நல்லது. இந்தப் பயணம் மூசிப்பாற்றிப் பயணம் அல்ல, ஓர் திருயாத்திரை. மடுப்பதி ஓர் திருசேத்திரம், வேடிக்கைத் தலமல்ல. அங்கு செபஞ் செய்யுங்கள். உங்கள் நேர்த்திகளைச் செலுத்துங்கள். திவ்விய பூசை காணுங்கள். பாவசங்கீர்த்தனம், நற்கருணை ஆகிய தேவதிரவிய அனுமானங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். நற்கருணை நாதரைச் சந்தித்து, திருமணித்தியாலம் செய்யுங்கள். செபமாலையைத் தியானியுங்கள். மடுப்பதியில் நீங்கள் தங்கும் காலம் அருள் நிறையும் காலமாக வேண்டும்.

உங்கள் யாத்திரை சிந்தாத்திரை யாகுக!

உங்கள் அன்புள்ள, அண்ணா.

## அகந்தை

'ஜெயம்'

1

மாலைக் காலமோடி வந்திட வேளங்கும்
மையிருள் சூழ்ந்து நிறைந்ததுவே
சோலைக்குள் ளேபல மின்மினி கள்கூடிச்
சுற்றிச் சுற்றி ஒளிவீசினவே

2

'ஆகா! நமைப்போல ஆர்ஒளி பெய்குவர்?
ஆனந்தம் பொங்குதே நம்மொளியால்
சாகாது நம்புகழ்' என்றதோர் மின்மினி
சந்தோஷம் கொண்டன மற்றவைதாம்

3

வான வெளிதனில் மீனினங் கள்தாமும்
வந்து குவிந்தன சோபையுடன்
மான மழிந்தன மின்மினிகள் பின்பு
மா மமதை கொண்ட மீனினங்கள்

4

பாலொளி சிந்திடும் சந்திரன் வந்தனன்
பார்த்து மறைந்தன தாரகைகள்
நீலக் கடலுடன் தன்புகழ் கூறியே
நீந்தி மகிழ்ந்தனன் சந்திரனும்

5

காலங் கடந்தது காகங் கரைந்தது
காலையும் வந்தது கீழ்த்திசையில்
கோல மொடுகதிர்ச் சூரியன் வந்தனன்
கொட்ட மடங்கினர் சந்திரனர்

6

பூதல மீதினில் வீண்பெரு மைகொள்ளும்
புத்தியில் லாதவர் கண்டிடவே
பேதம் அமைத்தனன் ஈச னியற்கையில்
பேதமை நீங்கிநாம் வாழ்ந்திடுவோம்.

## மனிதரைப் பிடிக்கிறவர்கள்

திவ்விய யேசுவின் பிரசங்கத்தைக் கேட்கச் சனங்கள் கும்பலாக வந்தார்கள். அவர் ஜெனசரெத் குளக் கரையில் நின்றார். சனம் கரையில் நிறைந்துவிட்ட படியால் பக்கத்தில் நின்ற இரு படகுகளில், சீமோனுடைய படகில் ஏறி, அதைக் கரையி லிருந்து சற்றுத் தண்ணீருக்குள் செலுத்தச் செய்து சனங்களுக்குப் போதித்தார்.

பின்பு "ஆழமான இடத்தில் படகைச் செலுத்தி" வலையைப் படுக்கும்படி சீமோனுக்கு உத்தரவு செய்தார். "குருவே! இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றுங் கிடைக்க வில்லை; ஆனால், நீர் சொல்லுகிறபடி செய்கிறேன்" என்று சீமோன் மறுமொழி சொன்னார். ஏராளமான மீன் பட்டது. அவைகளை ஒருபடகுக்குள் சேர்க்க முடியாமல் மற்றப்படகையும் கூப்பிட்டு இரண்டிலும் மீனை ஏற்றிக் கொண்டார்கள். அவைகள் பாரத்தால் அமிழ்ந்திவிடும்போல் இருந்தன.

இதைக் கண்ட சீமோன் பேதுரு யேசுவின் காலடியில் விழுந்து "ஆண்டவரே! நான்பாவி; நான் உம்முடன் புழங்கத் தகுதியுள்ளவன் அல்ல; நீர் என்னை விட்டுப்போக" என்றார். ஏனெனில், அவ்வளவு ஆச்சரியப்பட்டார். மற்றப் படகில் இருந்தவர்களும் ஆச்சரியப்பட்டார்கள்.

அங்கு சீமோனை நோக்கி, "பயப்படாதே! இனிமேல் நீ மனிதர்களைப் பிடிப்பாய்" என்றார் யேசு. கரைக்கு வந்ததும், எல்லாவற்றையும் விட்டுப் போட்டு அவர்கள் அவரைப் பின்பற்றினார்கள்.

(ஞாயிறு சுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

## எங்கே போயிருந்தாய்?

பரீஸ் நகரில் தனவந்தரான வர்த்தகர் ஒருவர் இருந்தார். தனது மனைவி இறந்ததுமுதல் அவர் தாறுமாறாய் நடந்து ஆத்துமகாரியங்களை அசட்டை செய்து வந்தார். கோவிலுக்கு ஒரு நாளும் போக மாட்டார். ஓர் உத்தமியான அவர் மகள்தான் வீட்டு வேலைகளைப் பார்த்து வந்தாள். ஒருநாள் அதிகாலை தந்தை வெளியே புறப்பட்டுப் போகும் போது மகள் எதிரே வருவதைக் கண்டு ஆச்சரியப்பட்டு: "அதிகாலையில் எங்கே போயிருந்தாய்?" என்றார்.

மகள்: "என் அருமைத் தந்தையே, நான் திவ்விய பூசை காணப் போயிருந்தேன்; உங்களுக்காகப் பக்தி உருக்கமாய் மன்றாடிக்கொண்டேன்."

தந்தை: (மிகுந்த கோபத்தோடு) "அடிக்கடி நன்மையும் வாங்குகிறாயா?"

மகள்: (அடக்கத்துடன்) "ஆம்; அடிக்கடி வாங்குகிறேன்; ஏனெனில், எனது வீட்டு வேலையை நன்றாய்ச் செய்யவும், தங்களுக்குப் பணிந்து நடக்கவும் எனக்குத் தைரியம் கொடுப்பது திவ்விய நன்மைதான்.

இதைக் கேட்டதே தந்தை இன்ன பதில் சொல்வதென்று அறியாது தலை குனிந்து நின்றார். பின்னர் சற்றுநேரஞ் சென்றதும், கண்ணில் கண்ணீர் ததும்பத் தலையை நிமிர்த்தி மகளைப் பார்த்து: 'என் கண்மணியே! நான் உன்னை என் மகளாகப் பெற்றது பெரிய பாக்கியம்! உனக்கு இஷ்டமான போதெல்லாம் பூசைக்குப் போ; நன்மை வாங்கு; எப்போதும் உன் நிர்ப்பாக்கிய தந்தைக்காக மன்றாடிக் கொள்' என்றார். இந்த நல்ல மகளை செபத்தால் வர்த்தகர் சில நாளைக்குள் மனந்திரும்பி நல்லகிறீஸ்தவர் ஆயினர்.

சகோதரர், சகோதரிகளே! தினமும் கோவில் சென்று, பூசைகண்டு, திவ்விய நன்மை உட்கொண்டு, உங்களுக்கும், உங்கள் பெற்றாருக்கும் வேண்டிய காரியங்களைக் கேளுங்கள்; சின்ன யேசு உங்கள் மன்றாட்டை எப்பொழுதும் கேட்டருள்வார்.

—ஜே. நீற்ற

## முனிவரும் புள்ளிமானும்

விருட்சங்கள் அடர்ந்த ஓர் பெருங் காடு. அதன் மத்தியில் ஓர் கருங் கற்குகை. அந்தக் குகையில் ஒரு முனிவர் வசித்து வந்தார். அவர் வயதில் முதிர்ந்தவர். அன்பும், தயாளமும் அவரிடம் குடிகொண் டிருந்தன. அதனால் வனத்திலுள்ள மிருகங்களுக்கும், பட்சிகளுக்கும் அவர் ஓர் பெரும் சிநேகிதனாக விளங்கி வந்தார். எல்லா மிருகங்களிலும் பார்க்க ஒரு புள்ளிமானை அவர் மிகுந்த பட்சத்தோடு வளர்த்து வந்தார்.

அவரது குகையின் வாசலில் ஒரு பெரிய மரம் நின்றது. அவர் அந்த மரத்தின் கீழ் தினமும் உட்கார்ந்து தியானஞ் செய்துகொண் டிருப்பார். அந்தப் புள்ளிமான் வந்து அவரின் பாதத்தடியில் அமைதியாய்ப் படுத்துறங்கும். அவரும் அதன் தலையை நேசத்துடன் தடவிக்கொடுத்து அன்பு காட்டுவார். அந்தப் பெண்மானின் பால்தான் அவரது போசனமும், பானமும். பெருங் காற்று, மழை ஆகிய அபாயம் ஏதாவது நேரிட்டால் உடனே மான் அவரது குகையைத் தேடி ஓடும்.

ஒருநாட்காலை முனிவர் வழக்கம் போல அந்த மரநிழலில் உட்கார்ந்திருக்கையில் நாய்கள் குரைக்கும் சத்தமும், குதிரையின் காலடிச் சத்தமும் அவருக்குக் கேட்டன. சடுதியாக அவரது புள்ளிமான் பற்றைக்குள் விருந்து ஓடிவருவதையும், அதனை ஓர்வேட்டைக்காரன் தொடர்ந்து வருவதையும் கண்டார். முனிவர் இருந்ததை வேட்டைக்காரன் காணவில்லை. மானுக்கு இலக்கு வைத்தான். ஆனால், இலக்குத் தப்பி, அம்பு முனிவரின் கையில் தைத்தது. முனிவர் உடனே நிலத்தில் விழுந்தார். அவரைக் கண்டதும் வேட்டையாட வந்த அரசனும், அரச தோழர்களும் குதிரையில் இருந்து இறங்கினர்.

அரசன் தோழர்களைப் பார்த்து: "இந்த முனிவரை நாம் இறந்துபோக விடப்படாது; செய்யக் கூடிய உதவிகளைச் செய்வோம்" என்றான். "என்னை என்னுடைய குகைக்குக் கொண்டுபோங்கள்" என்றார் முனிவர். ஒவ்வொரு நாளும் அரசன் முனிவரை அதிகம் கரிசனையுடன் பராமரித்து வந்தான்.

சில தினங்களிலே காயம் ஆறி முனிவரும் நன்கு குணமடைந்தார். ஓர் நாள் இருவரும் சம்பாஷித்துக்கொண்டிருக்கும் போது அரசன் தமக்குக் காட்டிய அன்புக்கும், அனுதாபத்துக்குமாக முனிவர் நன்றிகூறி, தேவனைப் பற்றி அவனுடன் சம்பாஷித்து, நீர் ஓர் கிறீஸ்தவனாக வரவேண்டும் என்றார். அது விஷயமாய் அன்று தொட்டு அரசன் தனக்குள் யோசிக்கத்தொடங்கினான். பிறகு முனிவரிடம் விடைபெற்றுக் கொண்டு அரண்மனை திரும்பினான். முனிவரும் மானுடன் வழக்கம்போலத் தமது குகையில் சந்தோஷமாய் வசித்து வந்தார். அரசன் ஒரு கிறீஸ்தவனாக வரவேண்டும் என்று முனிவர் எப்போதும் மன்றாடி வந்தார். அரசனும் போகும்போது முனிவரின் கரங்களைப் பிடித்து, நான் ஒருநாள் கிறீஸ்தவனாக வருவேன் என்றான்.


அதன்பின் அவ்வேட்டைக்காரன் அந்தக் காட்டுக்கு ஒருபோதுமே வரவில்லை. முனிவரது செபத்தினாலும், புள்ளிமான் வேட்டையினாலும் அரசனின் ஆத்துமத்துக்கு உண்மைவழி காட்டப் பட்டது. அர்ச். கைல்ஸ் என்னும் அம்முனிவர் இன்று மோட்சத்தில் மகிமையுடன் வீற்றிருக்கிறார்.

— எம். ஜெயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுசெப்பெ சார்த்தோ கட்டளைக்குரு ஆகின்றார்

( அர்ச். பத்தாம் பத்திநாதர் )



தொன் சார்த்தோ தோம்பொலோவில் ஒன்பது வருடங்கள் செலவிட்டார். அங்கே சந்தோஷமாய் இருந்தவர் சல்சானேவுக்கு மாற்றப்பட்ட பொழுது மனவருத்தப் பட்டார். அவருடைய புதுப்பங்கோ பெரியது. அவரும் எப்போதும் வறியவராகவே சீவிப்பார். ஏனெனில், தமது உணவையுங் கூட வறியவர்களுக்குக் கொடுத்து விடுவார்.

அவ்வாறாக, சல்சானேவில் ஓர்முறை பயங்கர கொள்ளைநோய் உண்டாயிற்று. அப்பகுதி மக்கள் எல்லோரும் ஏகமனதாய்த் தொன் சார்த்தோவின் உதவியை நாடினார்கள். அவரும் வைத்தியராய், குருவாய், நண்பராய், எல்லோர்க்கும் எல்லாமாய் ஊழியஞ்செய்தார். தொன் சார்த்தோ இராப்பகலாய் நடந்து திரிந்தார். அவருடைய உதவியை இரப்போரும், அவருடைய ஆறுதலான வார்த்தைகளைக் கெஞ்சுவோரும் நாள்முழுவதுமே அவரிடம் வந்துகொண்டிருந்தார்கள். "தொன் யுசெப்பெ! உடனே வாரும், என் தாயார் சாகப்போகிறாள்," "என் குழந்தைகள் இறந்து விட்டன, தொன் யுசெப்பெ!" இவ்வாறே அவருக்குச் செய்திகள் அடிக்கடி வந்தபடி இருந்தன.

அவருடைய வைத்தியரும், சகோதரி றோசாவும், சல்சானேவி லிருந்த அவளுடைய சிநேகிதரும் சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி தொன் யுசெப்பெயுக்கு எவ்வளவோ புத்தியெல்லாம் சொல்லிப் பார்த்தார்கள். "கொஞ்ச நாட்களுக்கு வீட்டுக்குப் போனால் நல்லது; அல்லது வெனிஸில் போய்த் தங்கினால் நல்லா யிருக்கும் அல்லவா? உம்முடைய தேகங் கெட்டுப் போனது; உமக்கு ஓய்வு அவசியம்" என்று முதலாய்ச் சொன்னார்கள்.

அவர்களுடைய நியாயங்களையும், கோரிக்கைகளையும் புன்னகையுடன் அவர் மறுத்து விடுவார். "தப்பியோடச் சொல்லுகிறீர்களே! கொள்ளை நோய்க்குத் தப்பி, தேவ கோபத்துக்கு ஆளாகச் சொல்லுகிறீர்களா? எனது கடமை இங்கு அல்லவா?" என்று வீரத்துவமாகக் கூறுவார்.

---

## புத்தக மதிப்புரை

## செந்தமிழ் மொழி வளம்

### தமிழ் (ஆரம்ப) இலக்கணம்

தொகுத்தவர்: பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை
விலை: ரூபா 1—60

தமிழ்மொழியின் இன்றைய சீர்கெட்டநிலையைக்கண்ட தமிழ்ப் பெரியாரொருவர், "நம்முடையது என்று பாஷைகூட இருக்கப்படாதா? தெய்வமே!" என்று இரங்கி ஏங்குகிறார். பழமையும், இனிமையும், பெருமையும்வாய்ந்த தமிழ்மொழியானது நாடுசுதந்திரம் பெற்றபின்னராவது விழிப்புற்று உயர்ச்சியடைதல் ஆகாதோ?

எம்மொழியிலாயினும் திருத்தமாகப் பேசுவதற்கும், எழுதுவதற்கும் இலக்கணப்பயிற்சி அகத்தியமாகும். இலக்கணம் 'வரண்ட எலும்பு' என மாணவரால் புறக்கணித்து ஒதுக்கப்படுகிறது. அதனால்அதைச் சுவைப்பட ஆசிரியர் கற்பித்தல்வேண்டும். நல்லமுறையில் எழுதப்பட்ட நூல்களும்தேவை. ஆங்கிலத்தில் புத்தம்புதிய பாஷைப்புத்தகங்கள் காலத்துக்குக்காலம் வெளிவந்த வண்ணமாக இருக்கின்றன அதுபோலநந்தமிழ்மொழிக்கண்ணும் நல்ல நூல்கள் வெளிவருமானால் தமிழ்இலக்கணமும் வெறுந்தடிப்பாடமாக அமையாது மாணவரால் விரும்பிச்சுவைத்துப் படிக்கத்தக்க ஒருபாடமாகும். தமிழ்மொழியும் வளர்ந்தோங்கும்.

இப்பெருங்குறையை நிவிர்த்திசெய்யும்முகமாக நீண்டகாலம் தமிழ்ப் போதகாசிரியராகவும், பத்திரிகாசிரியராகவும் தொண்டாற்றியதாற்பெற்ற பழுத்தஅனுபவத்தைத் துணைக்கொண்டு பண்டிதர்அவர்கள் "செந்தமிழ் மொழிவளம்" என்னும் இந்நூலைத் தொகுத்துத் தந்திருக்கிறார். ஆசிரியரின் பேருதவியில்லாமலே மாணவர் சுலபமாக விளங்கிக்கொள்ளத் தக்க வகையில் இந்நூல் அமைந்திருப்பதோடு, கற்றவற்றைமீட்பதற்குதவியாக ஒவ்வொருபாட இறுதியிலும் பரீக்ஷை வினாக்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ழகர ளகரபேதம், ஆண்பால், பெண்பால் உதாரணங்கள்,பலபொருள் குறித்த ஒருசொல், பிழையாகவழங்குஞ் சிலசொற்களும், அவற்றின் திருத்தமும், இணைச்சொற்கள், உவமை வாக்கியங்கள், தமிழ்நாட்டில் வழங்கும் பழமொழிகள் என்பனபோன்ற விஷயங்கள் இலகுவாய்க் கண்டறியக் கூடிய முறையாக அட்டவணைப்படுத்தப் பட்டிருக்கின்றன. இன்னும் அறிஞர்பலரால் எழுதப்பட்ட 'சிறந்த வசனங்கள்சில' இதன்கண் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. எனவே, இந்நூல் ஆக்கியோனது நோக்கத்திற்கியையத் தமிழ்மொழியைப் பிழையற எழுதுவதற்கும், பேசுவதற்கும் சாதனமாக அமைந்துளதென்பதற் கெட்டுணையும் ஐயமில்லை. தமிழ் கற்கும் மாணவர், மாணவிகளுக்கு இது பெரும்பயனளிக்கு மென்பதே எமது துணிபாகும்.

எமக்குஅனுப்பிய பிரதிக்காக நன்றி கூறுகின்றோம்.

---

## 6-ம்நோவனைப் புதியமூப்பர்

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலைச்சேர்ந்த குகன்குலக் கத்தோலிக்கமக்களின் ஆறும்நோவனை மூப்பராயிருந்து கடந்த 35 ஆண்டுகளாகச் சிறந்தொண்டாற்றிப் பிரஸ்தாபம்பெற்றிருந்தவரான திரு. ஜே. ஜேம்ஸ் மனுவேற்பிள்ளை அவர்கள் சுகத்தாழ்வுகாரணமாகத் தமதுபதவியிலிருந்து விலகிக்கொள்ளவே, ஆறும் நோவனையைச்சேர்ந்த சகல குடும்பங்களும் ஒன்றுசேர்ந்து தகுந்தவாறு ஆலோசித்தபின் அவருடைய மருகரும், யாழ்ப்பாணநகரசபைச் சிறுப்பரின் உதவியாளருமான திரு. ஆர். யோசெவ்பொன்னுத்துரை அவர்களைப் புதியமூப்பராகத்தெரிந்து, அவரையே மூப்பராக நியமனஞ்செய்ய வேண்டுமென்று ஆசனக்கோவிற்கட்டளைக்குரவர் வண. பி. ரி. ஜேம்ஸ் சுவாமியவர்களுக்குப் பணிவாக மனுப்பண்ணிக் கொள்ளலாயின.

சுவாமியவர்களும் அவர்களின்தெரிவை மனமுவந்தேற்றுச் சென்ற 26-ந் திகதி சனிவாரம் குருமனையிலே ஆறும் நோவனைமக்களும், அவர்களின் அன்பர்களும், மற்றும் பிரமுகர்களும் திரளாகக் குழுமியிருந்த சமூகத்திலே புதியமூப்பரை அதிகாரமுறையில் நியமனஞ்செய்து கூறிய வாழ்த்துரையிலே: "உங்கள்ஒற்றுமையையும், ஒத்துழைப்பையும், அமைச்சலையும் நாம் மிகப்பாராட்டுகிறோம்; புதியமூப்பரையும், உங்கள்யாவரையும் ஆசீர்வதிக்கிறோம்" என்று அவருக்குமலர் மாலை சூட்டி ஆசிமொழிகூறிநின்றார்.

அதன்மேல் அங்குசமூகமாயிருந்த சகலரும் புதியமூப்பரை வாத்தியவரிசைகளுடன் வழிநீளம் அன்பர்கள் பலரும் புஷ்பாரங்கள் சூட்டிநிற்க, ஊர்வலமாக அவரதுஇல்லத்துக்கு அழைத்துச்செல்லவே, அங்கு அவர் பெற்றாரும், பாரியாரும் அனைவரையும் வரவேற்றுநடத்திய பரிமளிப்பான சிற்றுண்டிஉபசாரணைவிழாவிற்குச் செவாலியர் எஸ். அருளானந்தம் அவர்கள் தலைமைதாங்கினர். அவ்வேளை அவரும், ஆசிரியர் சி. ஜே. இளையதம்பி, பி. ஏ., ஆசிரியர் எம். ஜேக்சப், திரு. ஜேக்கப் ஆரோக்கியம், திரு. கே. பேதுருப்பிள்ளை, திரு. ஏ. பி. முத்லைதயா ஆதியவர்களும் இரத்தினச்சுருக்கமாக நிகழ்த்திய சொற்பொழிவிலே முன்னாள் மூப்பரின் ஊக்கமுதலாம், சீரிய குணங்கள், நீடியசமூகதொண்டுகளைப் பாராட்டியும், புதியமூப்பரின் தகைமையை எடுத்துக்காட்டியும் நின்றார்கள். ஈற்றில் முன்னாள்மூப்பர் யாவருக்கும் நன்றிகூறியதும் விழா முற்றுப்பெற்றது.

—நிருபர்

---

— லூாதுதிருப்பதிக்குப் பிரித்தானியகத்தோலிக்கரின் வருடாந்த தேசியதிருயாத்திரை சென்றவைகாசி மாதக் கடைசிவாரத்தில் நடந்தேறியது. இதில் 1,160 பேர் கலந்து கொண்டார்கள். இவர்களில் நோயாளர் 160 பேர். இந்த 160 பேரிலும் 30 பேர் காவுகட்டில்களில் தூக்கிச் செல்லப்பட்டார்கள்.

— கம்யூனிஸ்தர்களாலே சென்ற புரட்டாசிமாதம் கைதுசெய்யப்பெற்றவரும், போலாந்தின் திருச்சபைஅதிபருமான கருதினால் விசின்ஸ்கிஆண்டவர் கடினநோய்கண்டமையாலே அறியப்படாத ஓர் சிறைச்சாலையிலிருந்து ஜினியெஸ்னோ எனுமிடத்திலுள்ள ஓர் சிறிய கன்னிகாமடத்தில் கொண்டு போய் விடப்பட்டிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

— அமெரிக்க ஐக்கியதேசத்திலே முன்னர்ஒருபோதுமே இல்லாதவிதமாகச் சென்றவருடத்தில் 10 கோடியே 33 லட்சம்றாத்தல்தேயிலை பாவனைக்குள்ளாயிருக்கிறது. ஆயினும் பிரித்தானியதேசத்தில் வருடம்ஒன்றுக்குச் செலவாகும்தேயிலையில் இது ஐந்திலொருபங்குக்கும் குறைந்ததாகும்.

---

## அவர் எங்கே? மறைந்தா இருக்கிறார்?

பாடசாலை முடிந்ததும் மரியதாஸ் வீட்டுக்குச் சென்றான். புத்தகங்களை ஓர்புறம் வைத்து விட்டுத் தனதுசிநேகிதன் பெனடிற்றைத் தேடிச் சிட்டாய்ப் பறந்தான். அவனைக்கண்டதும் "பெனடிற், இன்று நாம் இருவரும் கடற்கரை சென்று விளையாடுவோமா?" என்று கேட்டான். "இன்று நான் பெரியவர் ஒருவருடன் சம்பாஷிக்கப் போகிறேன்; அவருடன் சில முக்கியமான காரியங்களைப் பற்றிப் பேசவேண்டும்; அதனால் என்னை மன்னித்துக் கொள்" என்றான் பெனடிற். மரியதாஸ் பலமுறை வருந்திக் கேட்டும் அவன் சம்மதிக்கவில்லை "போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு அப்பால் நடந்து விட்டான்.

மரியதாஸுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அவன் கூறியது உண்மைதானா? என்று அறிய எண்ணினான். உடனே அவனுக்குத் தெரியாமலே அவனைப் பின்தொடர்ந்தான். பெனடிற் நேரே கோவில் சென்று உள்ளே நுழைந்தான். மரியதாஸ் கோவிலின் பின்புறமாகச் சென்று ஒருகதவில்இருந்த துவாரத்தின் வழியாக உள்ளே பார்த்தான்.

கோவிலில் தேவநற்கருணை விளக்கு எரிந்து கொண்டு இருந்தது. அப்போது பெனடிற்றைத்தவிர வேறு எவரும் அங்கே இல்லை. அவன் சொன்ன பெரியவர் சிலவேளை கோவிலில் சந்திப்பதாகக் கூறியிருக்க வேண்டும் என்று நினைத்தான் மரியதாஸ். அரைமணிநேரம்மட்டும் காத்திருந்த மரியதாஸ் கடைசியாகப் பொறுமை இழந்து கோவிலுள் சென்றான்.

"என்ன பெனடிற், பெரியவர் ஒருவருடன் பேசப் போகிறேன் என்று சொல்லி என்னைக் கடத்தி விட்டு வந்தாயே; இங்கே என்ன செய்கிறாய்?" என்று பரிகாசமாய்க் கேட்டான்.

"ஆமாம், அந்தப் பெரியவரோடுதான் பேசிக்கொண்டிருக்கிறேன்" என்றான் பெனடிற். "அவர் எங்கே மறைந்தா இருக்கிறார்? என் கண்ணைக் கட்டிப் போட்டா நிற்கிறார்?" என்று பரிகாசமாகக் கேட்டான் மரியதாஸ். "அதோ அந்தப் பேழையிலே திவ்விய நற்கருணையில் மறைந்து இருக்கின்ற எங்கள் ஆண்டவரைக் காட்டிலும் உலகில்பெரியவர் ஒருவர் இருக்கிறாரா? அவருடன்தான் பேசிக்கொண்டிருக்கிறேன்" என்று அவன்பதில்சொன்னான். மரியதாஸ் அப்போதுதான் கருமத்தை விளங்கிச் சற்பிரசாதநாதரை முழந்தாளிட்டு வணங்கினான்.

வே. சாமுவேல்
சம்பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்.

---

— முதலாவதுயுத்தம் நடந்தபோது பிறீசெல்தீவிற்கப்பால் அழிவாய்ப்பட்ட ஜேர்மனிய சாமான்கப்பல் ஒன்றிலிருக்கும் இருபதுலட்சம்பவுண் பெறுமதியான தங்கப்பாளங்களை வெளியேற்றுதற்கு உலாந்த கப்பல் மிதக்கும் நிபுணர்கள் ஆயத்தப்படுகின்றார்கள். இக்கப்பல் பத்தடிபாகத் தண்ணீரில்மாத்திரமே ஆழ்ந்துகிடக்கின்றது. தங்கப்பாளங்கள் 400பெட்டிகளில் இருக்கின்றன.

---

## திருஇருதயத் திருநாள்

வவுனியாப்பகுதியைச்சேர்ந்த வேப்பங்குளம், யேசுவின் திருஇருதய ஆலயத்தில் திருஇருதயநாதர்திருநாளின் ஆரம்பவிழாக்கள் சென்ற 18-6-54 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாயின. 24-ந் திகதி வியாழக்கிழமை மாலை 7 மணிக்குச் செட்டிகுளக் கட்டளைக்குரவர் வண. பிலிப்பு பொன்னையா சுவாமியவர்கள் வேஸ்பர் பாடி மறுநாட்காலை திருநாட்பூசை நிறைவேற்றினர். அதன்மேல் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் பக்தியருட்சியாய் நடந்தேறியது.

—எஸ். எல். எஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4-ம் வருட மரணஞாபகம்



பிறப்பு : 25—12—27 இறப்பு : 5—7—50

எனது அருமைக் குமாரன் திரு. இம்மனுவல் துரைரத்தினம் செல்வத்துரை அவர்கள் மறைந்து இன்றோடு (5-7-54) நான்கு ஆண்டுகள் நிறைவாகின்றன.

பாவி பயந்த மணியெட்டி லையோவெம்
ஆவித் துரையன னைந்திட்டால்—பூவில்
துறவோ ரறவோருற் றுரைக்கெஞ்
சிற்றேம்
மறவா துதவு மவற்கு.

என்னுமிரங்கி இதனைக்கண்ணுறும் சகலரையும் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி தயவாகக்கேட்டுக் கொள்ளுகிறோம்.

"நித்திய இளைப்பாற்றியை அவருக்குக்கொடுத்தருளும் சுவாமி... சமாதானத்தில் இளைப்பாறுவாராக."

இவர்பிரிவால் துயருறும்

தாயார் : ஸ்ரீமதி மு. செல்வத்துரை.

பாரியார் : ஸ்ரீமதி செ. துரைரத்தினம்.

சகோதரர்கள் : இராச இரத்தினம், நாகரத்தினம், தம்பிரத்தினம், அரியரத்தினம், தங்கரத்தினம், சங். சிஸ்றர் மேரிலூமினு (நேசரத்தினம்), யோகரத்தினம், சண்முகரத்தினம்.

பிள்ளைகள் : அலக்சாண்டர், யோண் ஒவ்ஆக்.

R. I. P.

## கல்லூரி விழா வதிரி

வதிரி, திருஇருதய கல்லூரியின் திருநாமங்கொண்ட இருதய நாதர் திருநாளும், இல்லவிளையாட்டுப் போட்டிகளும் இம்முறையும் வழமைபோலச் சிறப்பாக நடைபெறலாயின. திருநாளைமுன்னிட்டுத் திரிதின ஆராதனை 22-6-54 செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகிச் செபமாலை, மாலைஆராதனை, பிரசங்கம், ஆசீர்வாதத்துடன் முடிவாகிவந்தது. திருநாளன்று கல்லூரிஅதிபர் பாடற்பூசை நிறைவேற்றினர். பூசையின்பின் அனைவரும் சுற்றுப்பிரகாரமாகக் கல்லூரி சென்று அங்கே திருஇருதய இராசாங்கஸ்தாபகம் புதுப்பிக்கப்படலாயிற்று.

பிற்பகல் 3 மணிக்கு இம்மனுவேல் இல்லம், பெஞ்சமின் இல்லம், பாக்கியநாதர்இல்லம் ஆகியமூன்றும் தத்தமக்கெனச் சித்தஞ்செய்திருந்த இல்லங்களிலிருந்து கொடிகளுடன் விளையாட்டுமைதானஞ்சேர்ந்ததும் போட்டிகள் ஆரம்பமாயின. அவைகள்முடிவானதும் கல்லூரிஅதிபர் அழைப்பின்பேரில் சமுகமளித்திருந்த பழைய மாணவர், உபகாரிகள், சிநேகிதர், அயற்கல்லூரி ஆசிரியர்கள், ஆசிரியைகளைக் கல்லூரிஅதிபர் வரவேற்றுப் பேசினர்.

அன்று விழாப்பரிபாலகராக வடமராட்சி வட்டார வித்தியாதரிசி திரு. வீ. நடராசாஅவர்கள் அழைக்கப்பெற்றிருந்து, விளையாட்டுகளில வெற்றிபெற்றவர்களுக்கு அவரே பரிசில்கள் வழங்கி, விளையாட்டும் புத்தகப்படிப்பும ஒவ்வொரு மாணவனுக்கும் ஒருங்கே அவசியமெனக்கூறி வெற்றிமாலைசூடிய இம்மனுவேல்இல்லத்தைப் பாராட்டி நின்றார்.

ஈற்றில், ஆசிரியர் என். எம். சிங்கராசா அவர்கள்கூறிய நன்றியுரையிலே கல்லூரிக்குத் தலைமைதாங்கியிருக்கும் வண. பி. ஈ. அல்பிறெட் சுவாமியாரும், விழாப்பரிபாலகரான வித்தியாதரிசி வீ. நடராசாஅவர்களும் ஒரேகாலத்தில் ஒரேவகுப்பில் இக்கல்லூரியில் கல்விபயின்ற பழைய மாணவர்களென்றும், அவர்கள் இருவரிலும் நிர்வாகத்திறமை, பரிபாலிக்குந்தன்மை ஆகியன ஒருங்கே அமைந்திருப்பது கல்லூரிக்குச் சந்தோஷமான ஓர் இசைவென்றும் பேசியது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

— நிருபர்

## கட்டளைக்குருவர்பெருநாளும் பெற்றோர் தினமும்

கடந்த 24-6-54 வியாழக்கிழமை நெடுந்தீவுக் கட்டளைக்குருவர் வண. எஸ். ஏ. சுவாம்பிள்ளை சுவாமியவர்கள் பெயர்தாங்கு பெருநாளும், பெற்றோர்தினமும் நடுக்குறிச்சி ஆண்பாடசாலை ஆசிரியர், மாணவர்களால் அதிசிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று.

அன்றுபிற்பகல் 4-30 மணிக்குப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் குருமனையிலிருந்து சுவாமியவர்களைப் பாடசாலைக்கு அழைத்துவந்தார்கள். அங்கே அழகுறச் சிங்காரிக்கப்பட்ட உயராசனத்தில் அவர்எழுந்தருளியபோது, பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. கே. ரி ஞானப்பிரகாசம் அவர்களாற் புட்பாரஞ் சூட்டப்பெற்றனர். பாடசாலைமாணவர்களால் வரவேற்புப்பாக்கள் கனிவாகப் பாடப்பெற்றன. பாடாண்டினை வாழ்த்தியல்துறையில் எழுதிய வந்தனோபசாரப்பத்திரம் செல்வன் நீக்கலஸ்எனும் மாணவனால் இனிதேபாடி வழங்கப்பட்டது. நன்கு தயாரித்த ஞானப்பூச்செண்டும் சமர்ப்பிக்கப்பட்டது. தலைமைஆசிரியர்அவர்கள் சுவாமியவர்களின் அருங்குணசீலங்களையும், பெருந்தகைமிக்க சுவிசேஷத்தொண்டு, சமூகசேவைகளையும் திறம்படப்பாராட்டி அரியதோர் சொற்பொழிவாற்றினர். சாதிமதபேதமின்றி ஈராயிரவருக்குமேற்படக் குழுமியிருந்த மக்களின்மத்தியில் சுவாமியவர்கள் தமதுமனமார்ந்த நன்றியுரையைக் கூறியபோது, உவகைக்கடல் கரைபுரண்டோடியது.

பின்னர் பெற்றோர் தினத்துக்கென ஒழுங்குசெய்யப்பட்ட காலட்சேப நிகழ்ச்சிகள் சுவாமியார் தலைமையில் நடைபெற்றன. பரமார்த்தகுருசரிதை, அர்ச். யுவானியார் சரித்திரம் என்பன அழகுறநடித்துக் காட்டப்பட்டன. சிறுவர்களின் அபிநயப்பாக்களும், கும்மி கோலாட்டங்களும் அழகுக்கழகு செய்தன. அவர்களின ஆடல் பாடல், அழகுத்திறன்களையும், ஆசிரியர்களின் அயராஉழைப்பையும் யாவரும் பாராட்டினர். ஈற்றில் தலைமை ஆசிரியரின் நன்றியுரையோடும், பாடசாலைக்கீதத்தோடும் விழா இனிது நிறைவேறிற்று.

— நிருபர்

## சுபமிருத்து

சில்லாலைக் கத்தோலிக்க பாடசாலை ஆசிரியர்களில் ஒருவராகக் கடமையாற்றிவந்து இளைப்பாறிச் சென்றவருடம் காலஞ்சென்ற திரு. சூ. இஞ்ஞாசிமுத்து சவிரிமுத்து அவர்களின் பாரியாரான திருமதி ஆரோக்கியம் பொன்னு விருத்தாப்பிய நோய்கண்டு அந்திய தேவதிரவிய அனுமானங்களை நல்லறிவுடன்பெற்றுச் சென்ற 21-6-54 திங்கட்கிழமை சாயந்தரம் இறைவன்திருவடி சேர்லாயினள். மரிக்கும்போது இவவுக்குவயது 78. பிரபல ஆயுள்வேத வைத்தியர் சு. அத்தனாஸ்அவர்கள் இவவின்சகோதரர். சங். சிஸ்றர் மாகிறேற்மேரி, திருமதி சபினு ஸ்ரனிஸ்லாஸ், திருமதி பிலோமினு பெனடிற் என்னும் மூவரும் இவவின் சகோதரிகள். தேவபத்தி, வேதானுசாரம், மற்றும்நற்குண நற்செயல்களிற் சிறந்தஇவ மாசில்லாதமாதாவின் பத்திக்கூட்டத்தில் பலவருடகாலம் மத்துரேறுவாகத் திறம்படக் கடமையாற்றிவந்தா. இவவின் பிரேதசேமமானது மறுநாள் கன்னியாஸ்திரிமார், பத்திக்கூட்டப் பெண்மணிகள், இனசனர் சிநேகிதர் திரளாகக்கூடியிருந்த சமுகத்திலே கட்டளைக்குருவர் வண. எல். டெஸிசுவாமியாரும், இவவின்ஞானப் புதல்வர் வண. ஏ. எஸ். சிங்கராயர் சுவாமியாரும் துக்கசங்கீதம் பாடிக் கடைசி ஆசீர்வாதம் கூறிநிற்கச் சிறப்பாகநடந்தேறியது. இவவை இழந்து துன்புறும் சகோதரர், சகோதரிகள், இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P. — நிருபர்

## அர்ச். அன்னம்மாள் புதிய பாடசாலை

இப்பாடசாலை கொழும்புநகருக் கருகாமையிலுள்ள வத்தளைப் பட்டினத்திலே, அர்ச். அன்னம்மாளின் புதிய தேவாலய முன்றிலில் உள்ளது. இஃது மகாமேன்மைதங்கிய கொழும்பு அதிமேற்றிராணியாண்டவரவர்களின் பரிபாலனத்தின் கீழுள்ளது. கொழும்பு, பாலத்துறைதொடக்கம் நீர்கொழும்பு வரையுமுள்ள பகுதிக்கு இதுதான் ஒரேயொரு கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலையாய் இருப்பதுவே இதன் பெருமைக்கு எடுத்துக்காட்டாகும்.

இஃது இற்றைக்கு ஒன்றரை வருடங்களுக்குமுன் வத்தளைப்பங்கின் கட்டளைக்குருவர் வண. டபிள்யு. எம். நீக்குலாஸ் பெரேரா சுவாமியவர்களதும், அப்பங்கின் மரியாயின்சேனைத் தலைவர் ரி. எஸ். எச். பெர்னாண்டோ அவர்களினதும், வத்தளை நகரசங்க அங்கத்தவர்களினதும் மேலான இடையறு முயற்சியினாலும், பேருதவியினாலும் நடைபெற்றுவந்து, பாடசாலைகளின் பொதுமுகாமைக்காரர் அதிவண. டி. ஜே. அன்ரனிசுவாமியவர்களின் அயராத வேண்டுதலினாலும், வித்தியாதரிசிகள் எம். இராசசுந்தரம், கே. சிவபாதம் ஆகியோரின் முறையான சிபார்சுகளினாலும் சென்றவருடக் கடைசியில் வித்தியா பகுதியின் அங்கீகாரம் பெறலாயிற்று.

தற்போது இப்பாடசாலையிலே தலைமையாசிரியரோடு இருஉதவியாசிரியர்கள் பணியாற்றுகின்றனர். நூற்றுக்கு மேற்பட்ட மாணவர் மாணவிகள் கலைபயில்கின்றனர். பாலர் கீழ்ப்பிரிவு தொடக்கம் ஆறும்வகுப்புவரையும்நடத்தப்படுகிறது. தமிழ்ப்பாடங்களுடன் ஆங்கிலபாடமும் அதிசிறப்பாகக் கற்பிக்கப்படுகின்றது.

எதிர்காலத்தில் எமதுபாடசாலை எல்லாத்துறைகளிலும் நல்விடம்பெற்று, அதிசிரேஷ்ட பாடசாலையென்ற ஸ்தானமுற்று அதிகமதிகமான தமிழ்மாணவர்களுக்கு வருடந்தோறும் கல்வி பயிற்றிச் சிறப்புற்றோங்க அர்ச். அன்னம்மாள் எமது ஆசிரியர்கள்மேலும், மாணவர்கள்மேலும் அருளாசி பொழிவாராக!

மைக்கல்
கலவன்பாடசாலை, வத்தளை.

## THANKSGIVING

Thanksgiving to the Sacred Heart, Our Lady of Perpetual Succour, St. Jude and Three Kings of the East for an easy confinement and the blessing of a healthy child.

M. J. S. & FAMILY.

## எனக்கே செய்தீர்கள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் வந்தபின்னர் முற்றும்மாறுதல் அடைந்தது. துக்கம், வாட்டமெல்லாம் வெகுசீக்கிரம் மறைந்தொழிய, அதன்கண் புன்னகை தவழ்ந்தொளிர்ந்தது. ஆகவே, அவன் நித்திரைதெளிந்து எழுந்தபோது, சந்தோஷங் குடிகொண்ட அகத்தினனாய், முகத்தினனாய் எழுந்திருந்து உல்லாசமாய்த் தனது ஊர்போய்ச் சேர்ந்தான்.

ஏன் இந்தமாற்றம்? அவன் மரத்தின்நிழலில் நித்திரைசெய்கையில் ஒரு சொர்ப்பனம் கண்டான். அதிலே பெத்லகேம் திருக்குழந்தையை அதன் தாய்மடியில் தரிசித்ததாகவும், அப்போது அவர்கள் வீற்றிருந்த எளிய இல்லம முழுவதும் சுகந்தவாசனையால் பரிமளித்ததாகவும், தான்அத்தெய்வீக திருக்குழந்தையண்டை முழந்தாட்படியிட்டு வணங்கித் தலையைநிமிர்த்திப் பார்த்தபோது அதன் நெற்றியில் தன்னுடைய மாணிக்கக்கல் ஒளிவிட்டுப் பிரகாசிக்க, குழந்தையின் திருக்கரத்தில் தன்னுடைய பொற்கட்டி மின்னுவதாகவும்கண்டான். கண்டதும் பேராச்சரியம்கொண்டவனாய் அந்தத் தேவபாலனின் பேரழகைப் பின்னுமொருமுறை கண்டுகளிக்குமாறு அதனை உற்றுநோக்கியபோது, என்ன ஆச்சரியம்! தான் சற்று முன்னே மாணிக்கம்கொடுத்து மீட்டருளிய அந்த அடிமைப்பாலகனே தேவமாதாவின்மடியில் தான்காணும் பாலகனென்று அறிந்து அளவில்லாமகிழ்ச்சி அடைந்தான். இச்சம்பவத்தில் விளங்குகிற இருவிசேஷங்கள் நம்மால் கவனிக்கப்படவேண்டியனவாகும். அவையாவன : தரித்திரர், துன்பப்படுவோர் முதலியவர்களுக்கு இரங்கி அவர்களுக்கு உதவிபுரிதல் மிகமேலான புண்ணியம்என்பது ஒன்று. ஏழை எளியவர்களுக்குச் செய்தஉதவி எம்பிரான் யேசுநாதருக்கே செய்ததாகுமென்பது மற்றொன்று.

— இந்தோசீனயுத்தம் அதிவிரைவிலே நிறுத்தப்பட்டுச் சமாதானம்ஏற்படாவிடில் அஃது ஓர்சர்வதேச யுத்தமாகவும், ஓர்கால் ஓர்அணுக்குண்டு யுத்தமாகவும் வளர்ந்து முற்றிவிடும் அபாயத்தை நாம் எதிர்நோக்கவேண்டியவர்களாவோம்என்று பிரான்சின் புதிய பிரதமராகவந்திருக்கும் எம். பியேர் மென்தெஸ் பிரான்ஸ்கூறியிருக்கின்றார்.

* * *

— சுவிற்சர்லாந்துதேச சுவென்ட் எனுமிடத்திலே அன்ரன் டோமினிக் எனும்வீரர் 1805-ம் ஆண்டு 184 றாத்தல்நிறையுள்ள ஓர்கல்லைத் தனது ஒற்றைக்கையால்தூக்கித் தலைக்குமேலாக உயர்த்தித் தன்னுடையகால்களை அசைக்காமலே அதனைப் 19 அடி 2 அங்குலதூரத்துக்கு எறியலாயினர். அவருக்குப்பின் இத்தகைய சாதனை ஒன்று இன்னுமேநடைபெறவில்லையாம்.

* * *

— "எக்காலத்திலாவது சொல்லப்பட்ட மகாப்பெரிய சரித்திரசம்பவம்" எனும் தலையங்கத்துடன் கிறீஸ்துநாதரின் சீஷியசரித்திரவரலாற்றைத் திரு. புல்ரன் அவேர்லர்எனும்மேதாவி எழுதியிருந்தார். இந்தப்புத்தகத்திலே இதுவரை 30 லட்சம்பிரதிகளுக்குமேல் விலைப்பட்டுள்ளன. இவர் ஓர்புரொட்டஸ்தாந்தாயிருந்து மனந்திரும்பியவர். இந்தச்சரிதையைப் படம்பிடிக்கும் உரிமையைப் பெறுவதற்காகக் ஹொலிவூட்டிலுள்ள பிலிம்ஸ்ரூடியோ ஒன்று ஏழுலட்சம்பவுண் உபகரிக்கவிருக்கிறது.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 1 -1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org